pக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பா

விலை ரூபா: 6.00

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

# வலம்புரி
## The Valampuri

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | ஆடி 19 | திங்கட்கிழமை (04.08.2003) | தொலைபேசி - 2223378 | ஒலி 228

## மூதூரில் சுட்டுக் கொலை

(திருகோணமலை)

திருகோணமலை மூதூர் 59-ம் கட்டைபபகுதியில் நேற்று அதிகாலை 5 மணியளவில் முன்னாள் புலனாய்வுப் பொலிஸார் ஒருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

மூதூர் ஜின்னா நகரைச் சேர்ந்த நூர்தின் நில்வா (வயது35) என்பவரே இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொலை செய்யப்பட்டவர் ஆவார்.

பிரஸ்தாப நபர் தனது வீட்டில் இருந்து ஜின்னா நகருக்குச் சென்று கொண்டிருந்த போதே துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார். இவர் கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர்

(10ம் பக்கம் பார்க்க)

## ஏழாம் சுற்றுப் பேச்சை பாரிஸில் நடத்த ஏற்பாடு

# புலிகள் முன்வைக்கும் திட்ட வரைபில் பொலிஸ், காணி, வருவாய் இடம்பெறும்

(கொழும்பு)

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான ஏழாவது சுற்று சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு பிரான்ஸின் தலைநகர் பாரிஸ் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. நோர்வே அனுசரணையாளர்கள் இது தொடர்பாக பிரான்ஸ் அதிகாரிகளுடன் பேச்சுக்கள் நடத்தி வருகின்றனர். இலங்கை அரசு இதற்கு தனது உடன்பாட்டை வழங்கியுள்ளது.

விடுதலைப் புலிகளின் சட்ட ஆலோசகர் கூட்டமும் இம் மாதம் நடுப்பகுதியில் பாரிஸிலேயே நடப்பதற்கு ஏற்பாடாகியுள்ளது. இதில் அரசாங்கத்தின் இடைக்கால திட்ட வரைபு ஆராயப்படுவதுடன் புலிகள் சமர்ப்பிக்கவிருக்கும் இடைக்கால திட்ட வரைபுக்கான மாற்றுப் பிரேரணைகளும் ஆராயப்படும்.

விடுதலைப் புலிகள் அரசாங்

(10ம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தின் அழிவு வேதனை தருகிறது

# சமாதானப் பேச்சுக்களை புலிகள் தொடர வேண்டும்!



## யப்பான் பிரதி அமைச்சர் கோரிக்கை

(அலுவலக நிருபர்)

கடந்த மூன்று மாதங்களாக இடை நிறுத்தப்பட்டுள்ள சமாதானப்

# புலிகள் தொடர வேண்டும்!

## யப்பான் பிரதி அமைச்சர் கோரிக்கை

(அலுவலக நிருபர்)

**கடந்த மூன்று மாதங்களாக இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தையை மீண்டும் விரைவில் ஆரம்பிப்பதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் முன்வரவேண்டும். இவ்வாறு யப்பானிய பிரதி வெளிவிவகார அமைச்சர் ரெற்சுரோ ஜானு விடுதலைப் புலிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.**


நேற்றுக் காலை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த யப்பானிய பிரதி வெளிவிவகார அமைச்சர் ரெற்சுரோ ஜானு கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயத்தில் இடம் பெற்ற கூட்டம் ஒன்றிலே மேற் கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.


யப்பானிய பிரதி வெளிவிவகார அமைச்சருடன் இலங்கைப் பிரதி வெளிவிவகார அமைச்சர் லால் தர்ம சிறிகமகே,யுனிசெவ் பிரதிநிதி எச்சைவர் ஆகியோரும் யாழ்ப்பாணம் வந்திருந்தனர்.

அக் கூட்டத்தில் மக்கள் மத்தியில் உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில்;

இலங்கையில் தோற்றுவிக்கப்பட்டுள்ள சமாதானம் நிலை பெற இருபகுதியினரும் முறிந்து போன

(10ம் பக்கம் பார்க்க)





யப்பானிய அமைச்சரின் யாழ்.விஜயத்தின் போது அவர் சம்பிரதாய பூர்வமாக வரவேற்கப் படுவதையும், அவர் சிறுமி ஒருவரை அன்புடன் அரவணைக்கும் காட்சியையும் படங்களில் காணலாம். படங்கள்:க.பவன்

## இந்த வருட இறுதிக்குள் பொதுத் தேர்தல் நடக்கும்

### முன்னதாக எதிர்ப்பு நடவடிக்கை

(கொழும்பு)

கூட்டணி அமைக்கும் முயற்சிகள் இழுபறியில் இருப்பதைத் தொடர்ந்து ஸ்ரீ.ல.சு.கட்சியும் ஜே.வி.பியும் கூட்டாக எதிர்ப்பு நடவடிக்கைகளில் இறங்கியுள்ளன.இந்த ஆண்டு முடிவதற்குள் ஒரு பொதுத் தேர்தலைச் சந்திக்க வேண்டியிருக்கும் எனறு ஜனாதிபதி குமாரதுங்கா தனது கட்சியினருக்குக் கூறியிருப்பதையிட்டே மேற்படி நடவடிக்கையில் இறங்குவதென்று தீர்மானிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

இரு கட்சிகளுக்குமிடையில் கூட்டணி அமைப்பதில் முட்டுக் கட்டையாக இனப்பிரச்சினையே அமைந்திருந்தது.அதாவது இனப்பிரச்சினைத் தீர்வில் ஒற்றுமை ஏற்பட்டிருந்ததாயினும் நோர்வே அனுசரணையாளர்

(10ம் பக்கம் பார்க்க)

## மீளக்குடியமர்வுக்கு யப்பான் 30 மி.அமெ.டொலரை வழங்கும்

(யாழ்ப்பாணம்)

கடந்த கால யுத்த அனர்த்தங்களினால் இடம் பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்துவதற்கு யப்பான் அரசாங்கம் 30.மில்லியன் அமெரிக்க டொலர்களை ஒதுக்கியுள்ளது என யாழ்ப்பாணம் வந்திருந்த யப்பானியப் பிரதி வெளிவிவகார அமைச்சர் ரெற்சுரோ ஜானு தெரிவித்துள்ளார்.

வடக்குக் கிழக்கில் இடம் பெற்ற யுத்த அனர்த்தங்களினால் இடம் பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்தும் விடயத்தில் யப்பானிய அரசு எவ்வகைகளில் உதவும் என எமது செய்தியாளர் கேட்ட போதே யப்பானியப் பிரதி வெளிவிவகார

(10ம் பக்கம் பார்க்க)

## யப்பான் பிரதி அமைச்சர் இன்று பிரதமரைச் சந்திப்பார்

### சமாதானப் பேச்சுக்கள் குறித்து ஆராயப்படும்

(கொழும்பு)

யப்பானின் பிரதி வெளிவிவகார அமைச்சர் ரெற்சுரே ஜானு இன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பது குறித்தும் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதில் உள்ள தடங்கல்கள் குறித்தும் அவர் விரிவாக ஆராயவுள்ளார்.

இச் சந்திப்பில் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், அமைச்சர் மிலிந்த மொறகொட ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதேவேளை, சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீள ஆரம்பிக்கப்படும் பட்சத்தில் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் மேற் கொள்ளப்பட வேண்டிய புனரமைப்புத் திட்டங்கள் தொடர்பாகவும் பிரதமருடனான சந்திப்பில் அவர் ஆராயவுள்ளார்.

(சு)

# தமிழ், முஸ்லிம் மக்கள் நிம்மதியாக வாழ வடக்கு கிழக்கு பிரிக்கப்பட வேண்டும்

## அதாவுல்லா மீள வலியுறுத்து

(மட்டக்களப்பு)

தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் எதிர்காலத்தில் சர்ச்சைகளின்றி நிம்மதியாக வாழ வேண்டும் என்பதற்காகவே வடக்கும் கிழக்கும் தனித்தனி மாகாணங்களாகப் பிரிக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை நாம் முன்வைத்துள்ளோம் என அஸ்ரப் காங்கிரஸ் தவிசாளரும் நெடுஞ்சாலை அமைச்சருமான ஏ. எல். எம். அதாவுல்லா தெரிவித்துள்ளார்.

ஏறாவூரில் நேற்று சட்டத்தரணி எம். வை. அப்துல் யத்தீப் தலைமையில் இடம் பெற்ற விஷேட கூட்டமொன்றில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்தும் அங்கு உரையாற்றுகையில், சிங்கள தலைமைத்துவங்கள் தமிழ் மக்கள் மீது மேற்கொண்ட அடக்கு முறையினை அடுத்து தமிழ் சமூகம் தமது உரிமைகளுக்காக ஆயுதப் போராட்டம் நடாத்தியது. இந்நிலையில் இனப்பிரச்சினைக்கான தீர்வு சிறுபானமைத் தமிழர், முஸ்லிம் சமூகத்தை அடக்கியாளுகின்ற ஓர் சூழ் நிலையினை ஏற்படுத்தி விடக்கூடாது என்பதில் மிகவும் தெளிவாக இருக்கவேண்டும்.

அதேவேளை, தேவையான சந்தர்ப்பங்களில் தமிழர்களையும் முஸ்லிம்களையும் தமிழ் பேசும் இனமென்று ஒற்றுமைப்படுத்தி தமிழர் தலைமைத்துவங்கள் கூறுகினறன.

ஆனால், முஸ்லிம் சமூகம் தமது அடிப்படை உரிமைகளைக் கேட்கும் போது தவறான கண்ணோட்டத்தில் விமர்சிப்பது மிகுந்த வேதனையைத் தருகின்றது.

அத்துடன், வடக்கு கிழக்கு மாகாணத்திற்கு தமிழ் பேசும் தலைமைததுவம் இருக்கவேண்டும் என்பதில் எவ்வித கருத்துவேற்றுமையும் கிடையாது. எனினும், வடக்குக் கிழக்கு தனித்தனி மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டு, வடக்கு தமிழர் ஒருவரின் தலைமைத்துவத்தின் கீழ் நிர்வகிக்கப்படுவது போன்று கிழக்கு மாகாணத்திற்கென மொழியால் ஒனறுபட்ட முஸ்லிம் இனத்தவர் முதலமைச்சராக நியமிக்கப்படவேண்டும்.

இதனால், எதிர்காலத்தில் சர்ச்சைகளைத் தவிர்த்துக்கொள்ள முடியும் என்பதே எமது ஆலோசனையாகும்.

அதேவேளை, அவசரகாலச் சடடத்தின் கீழ், இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் தற்காலிகமாகவே வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டிருந்தன. தற்போது அவசர காலச்சட்டம் நாடடில் அமுலில் இல்லை. இதனால் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கென தனித்தனி ஆளுநர்கள் நியமிக்கப்பட்டு நிர்வாகம் செய்யப்படவேண்டுமென நாம் ஜனாதிபதியைக் கோரியுள்ளோம்.

இதற்கிடையில் முஸ்லிம் சமூகத்தின் உரிமைகள் பற்றி உரத்துப்பேசும் சந்தர்ப்பம் இதுவல்லவென்று முஸ்லிம் தலைமைத்துவங்கள் நீண்ட நாட்களாகக் குறுக்கீடு செய்து வருகின்றமை வேடிக்கை தருகிறது.

நாம் யுத்தம் நடைபெறும் காலத்தில் விதண்டாவாதம் புரியவில்லை. மாறாக, காணப்படவுள்ள நிரந்தரத் தீர்வில் முஸ்லிம் சமூகத்தின் பங்கு பற்றினையே நாம் வலியுறுத்துகின்றோம் என்று அதாவுல்லா மேலும் தெரிவித்துள்ளார். (உ-18)

# ஜப்பான் மாணவிகளின் விருப்பத்தை நிறைவேற்றினார் பிரதமர் ரணில்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பை ஏற்று ஜப்பான் மாணவிகள் மூவர் நேற்று அதிகாலை இலங்கைக்கான சுற்றுப்பயணமொன்றை மேற்கொண்டுள்ளனர்.

பிரதமர் ஜப்பானுக்கான விஜயம் மேற்கொண்டிருந்த போது இலங்கைக்கான சுற்றுப்பயணமொன்றை மேற்கொள்ளவிரும்புவதாக இம்மாணவிகள் விருப்பம் தெரிவித்ததன் அடிப்படையிலேயே பிரதமரின் ஏற்பாட்டில் இவர்கள் இலங்கை வந்துள்ளனர். (தி)

# திறமைகளை வெளிப்படுத்த தயாராகிறார் லக்ஷ்மன்

நியூசிலாந்து மற்றும் அவுஸ்திரேலிய நாடுகளிற்கு எதிராக எதிர் வரும் செப்ரெம்பர் மாதம் இந்தியாவில் ஆரம்பமாக விருக்கின்ற டெஸ்ற் மற்றும் ஒருநாள் சர்வதேச போட்டிகளில் தனது துடுப்பாட்ட திறமைகளை வெளிப்படுத்தப் போவதாக வீ.வீ.எஸ்.லக்ஷ்மன் கூறியுள்ளார்.

உலகக் கிண்ண கிரிக்கெற் போட்டிகளின்போது இந்திய அணியில் வாய்ப்பு கிடைக்காததையிட்டு மிகுந்த கவலை அடைந்ததாகக் குறிப்பிட்ட லக்ஷமன் அந்த கவலையில் இருந்து மீள சில காலம் சென்றதாகவும் கூறியிருந்தார்.


2001ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவிற்கு எதிரான டெஸ்ற் போட்டியின் போது வெற்றி பெறுவதற்கு லக்ஷ்மன் பெற்ற 281 ஓட்டங்கள் முக்கிய காரணமாக அமைந்தது.

டெஸ்ட்போட்டி ஒன்றில் இந்திய வீரர் ஒருவர் பெற்ற அதிகூடிய ஓட்டமான இந்த ஓட்டம் இந்திய அணியில் அவருக்கு நிலையான இடத்தினை பெற்று கொடுத்திருந்தது.

எவ்வாறாயினும் செப்டம்பர் மாதம் இவருக்கு இரண்டுவகை போட்டிகளிலும் விளையாட வாய்ப்பு கிடைக்குமென நம்பப்படுகிறது. (உ-68)

# கே.சி.சி.சி. வெற்றிக்கிண்ணம்


ஜப்பானிய அமைச்சரின் யாழ். விஜயத்தின் போது...



சம்பிரதாய முறைப்படி வரவேற்கப்படுகிறார்.



மக்களுடன் கலந்துரையாடுகிறார்.



களை வெளிப்படுத்தப் போவதாக வீ.வீ.எஸ்.லக்ஷ்மன் கூறியுள்ளார்.

உலகக் கிண்ண கிரிக்கெற் போட்டிகளின்போது இந்திய அணியில் வாய்ப்பு கிடைக்காததையிட்டு மிகுந்த கவலை அடைந்ததாகக் குறிப்பிட்ட லக்ஷமன் அந்த கவலையில் இருந்து மீள சில காலம் சென்றதாகவும் கூறியிருந்தார்.

வீரா ஒருவர் பெற்ற அதிகூடிய ஓட்டமான இந்த ஓட்டம் இந்திய அணியில் அவருக்கு நிலையான இடத்தினை பெற்று கொடுத்திருந்தது.

எவ்வாறாயினும் செப்டம்பர் மாதம் இவருக்கு இரண்டுவகை போட்டிகளிலும் விளையாட வாய்ப்பு கிடைக்குமென நம்பப்படுகிறது.

(உ-68)

# கே.சி.சி.சி.வெற்றிக்கிண்ணம் மானிப்பாய் பரிஷ் அணிக்கு

(யாழ்ப்பாணம்)

கே.சி.சி.சி. வெற்றிக் கிண்ணத்தை மானிப்பாய்ப் பரிஷ் அணி சுவீகரித்துக் கொண்டது.

நேற்று கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் யாழ். பல்கலைக் கழக அணியை எதிர்த்து மானிப்பாய் பரிஷ் அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பல்கலைக் கழக அணி 40 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 226 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய்ப் பரிஷ் அணி 38 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 227 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

இதில் சிறந்த பந்து தடுப்பாளர், சிறந்த துடுப்பாட்டக்காரர் ஆகியோருக்கான பரிசை முறையே பல்கலைக் கழக அணியைச் சேர்ந்த ஜே.ரி. றொபேசன் ஆர்.சாஜகான் ஆகியோரும் சிறந்த பந்துவீச்சாளர், ஆட்ட நாயகன் ஆகியோருக்கான பரிசை முறையே மானிப்பாய்ப் பரிஷ் அணியைச் சேர்ந்த எஸ்.பாஸ்கரன், என்.ஜெயகாந்தன் ஆகியோரும் பெற்றனர்.

(ந-5)

# கென்ற் அணியின் வெற்றிக்கு வழிவகுத்தார் முரளிதரன்

இங்கிலாந்தில் பிராந்திய அணிகளான கென்ற், எக்ஸ்எஸ்.அணிகளுக்கிடையில கன்டபெரியில் நடைபெற்ற நான்குநாள்டெஸ்ற்போட்டியில்கென்ற் அணி 55 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

கென்ற் பிராந்திய அணிக்காக விளையாடிய இலங்கையின் நட்சத்திரச் சுழல்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் இரண்டாவது இனிங்ஸில் துல்லியமாகப் பந்து வீசி 61 ஓட்டங்களுககு 6 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி கென்ற் அணியின் வெற்றிக்கு வழிவகுத்தார்.

கென்ற் அணி அதன் முதல் இனிங்ஸில் 189. ஓட்டங்களையும் இரண்டாவது இனிங்ஸில் 284 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டது. எக்ஸ்.எஸ். அணி முதல் இனிங்ஸில் 183 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கென்ற் அணி சார்பாக பந்து வீசிய இல்காம் 26 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களையும், கான் 65 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டையும் கைப்பற்றினர். எக்ஸ்.எஸ்.அணி இரண்டாவது இனிங்ஸில் 235 ஓட்டங்கள் இதில அணி பிளவர் 83 ஓட்டங்களை பெற்றுக்கொண்டார். பந்து வீச்சில் முரளிதரன் 61 ஓட்டங்களுக்கு 6விக்கெட்டுகளையும் சாகஸ் 61 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

(உ-68)

## காந்தி அணி வென்றது

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் குமரகோட்டம் சனசமூக நிலையத்தின் வருடாந்த இல்ல மெய் வல்லுநர் போட்டியை முன்னிட்டு இல்லங்களுக்கிடையே நடாத்தப்பட்ட கிரிக்கெட்போட்டியில் காந்தி அணி 90 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

காந்தி இல்லத்திற்கும் சுபாஸ் இல்லததிற்கும் இடையே நடைபெற்ற இறுதியாட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய காந்தி இல்லம் 20 ஓவர்கள் முடிவில் 170 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சுபாஸ் அணி 17.5 ஓவரில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 80 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

(ந-5)

ன்று முஸ்லிம் தலைமைத்துவங்கள் நீண்ட நாட்களாகக் குறுக்கீடு செய்து வருகின்றமை வேடிக்கை தருகிறது.

நாம் யுத்தம் நடைபெறும் காலத்தில் விதண்டாவாதம் புரியவில்லை. மாறாக, காணப்படவுள்ள நிரந்தரத் தீர்வில் முஸ்லிம் சமூகத்தின் பங்கு பற்றினையே நாம் வலியுறுத்துகின்றோம் என்று அதாவுல்லா மேலும் தெரிவித்துள்ளார்.

(உ-18)

## தீர்மானம் ஜனாதிபதிக்கு அனுப்பிவைப்பு

(கொழும்பு)

தமிழர் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் தனிநபர் பிரேரணையின் சட்டவாக்கல் தன்மை பற்றி ஆராய்ந்த உச்ச நீதிமன்றம், அதன் தீர்மானத்தை ஜனாதிபதிக்கும், சபாநாயகருக்கும் அனுப்பி வைத்துள்ளது.

கிறிஸ்தவ மத அடிப்படையிலான சனசமூக சேவை நிலையமொன்றை சட்ட ரீதியாக கொண்டு வரும் யோசனையை மேற்படி பாராளுமன்ற உறுப்பினர் சமர்ப்பித்திருந்தார்.

இது தொடர்பான தீர்மானமே கடந்த வெள்ளிக்கிழமை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(தி)

## றோயல் அணி வெற்றி பெற்றது

(கொழும்பு)

கொழும்பு றோயல் கல்லூரிக்கும் கண்டி திருத்துவக் கல்லூரிககும் இடையில் நேற்று முன்தினம் நடைபெற்ற றகர் போட்டியில் 13:8 என்ற புள்ளிகள் அடிப்படையில் றோயல் கல்லூரி வெற்றி பெற்று பிரெட்வே சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது. அடுத்தடுத்தாக மூன்று தடவைகள் வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.


கொழும்பு றோயல் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப்போட்டியி ல் றோயல் கல்லூரி அணி ஆரம்பம் முதலே தமது திறமைகளை வெளிக்காட்டியது.

இவ்விரு கல்லூரிகளுக்குமிடையிலான இப்போட்டியின் ஆரம்பச் சுற்றுப் போட்டி ஒன்றும் கடந்த இரு வாரங்களின் முனனர் கண்டி போகம்பெர மைதானத்தில் இடம்பெற்ற வேளையிலும் கொழும்பு றோயல் கல்லூரி வெற்றிபெற்றிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.


(உ-68)



நிகழ்வில் சிறப்புரையாற்றுகிறார். அருகில் இலங்கைப் பிரதி வெளிவிவகார அமைச்சர் மற்றும் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் ஆகியோர் அமர்ந்திருக்கின்றனர்.



பொது அமைப்பு பிரதிநிதிகள் மகஜர் கையளிக்கின்றனர்.



நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினர்.

## சிறுவிளம்பரம்

**வியாழ மாற்றம் வாங்கி விட்டீர்களா?**

எங்கும் விற்பனையாகின்றது. ஆனந்தி வெளியீடு சோதிடர் V.A சிவராசா எழுதியது என்று கேளுங்கள் மற்றும் அழகியல் தரம்1-5 வரை புலமைப்பரிசில் பரீட்சை வழிகாட்டி (தரம் 3,4,5)23-7.2003ல் பெயர்ச்சியடையும் குரு 20-8.2004 வரை பன்னிரு இராசிகளுக்கும் அளிக்கின்ற பலாபலன்களை அறிந்து கொள்ளுங்கள் கைரேகை, ஜாதகம் எண்சோதிட மூலம் உங்கள் எதிர்காலம் அறிய 152B, அரசடி றோட் கந்தர்மடம் என்ற விலாசத்திற்கு வந்து பாருங்கள். (7299)

## மின் விநியோகம்

(வேலணை)

வேலணை சாட்டி வீதிக்கு மின்சார விநியோகம் வழங்கப்படவுள்ளது.

இதற்கான மின் இணைப்புக்கள் யாவும் பூர்த்தியடைந்த நிலையில் உள்ளன. முன்பு மின் விநியோகம் செய்யப்பட்ட இந்த சாட்டி வீதிக்கு கடந்த 15 வருடங்களாக மின் விநியோகம் செய்யப்படாதிருந்தது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை சாட்டி சிந்தாத்திரை மாதா தேவாலயத்திற்கும் நீண்ட இடை வெளிக்குப்பின்னர் மின்சாரம் வழங்கப்பட இருப்பது குறிப்பிடத்தக்கது.

(உ-47)

## கடன் திட்டம்

(வேலணை)

போரூட் நிறுவனத்தினால் வேலணைப் பகுதி கிராம அபிவிருத்திக் குழுக்களின் ஊடாக தொழில் முயற்சிக்கு தற்போது கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

குறைந்த வட்டியுடன் பயனாளிகள் பயன் பெற்று தொழில் முயற்சியில் ஈடுபடுவதற்கு வசதியாகவே இக் கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. (உ-47)

# நிரந்தர அமைதிக்கும் நல்லாட்சிக்கும் அதிகாரப் பகிர்வு வழிவகுக்கும்

## ஜப்பானிய அமைச்சரிடம் மனிதநேய அமைப்புகள் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

''அமைதிப் பேச்சுக்களை மீண்டும் தொடங்கவும் பரஸ்பர நம்பிக்கையை கட்டியெழுப்பவும் முழு அதிகாரங்களும் கொண்ட இடைக்கால நிர்வாகம் ஒன்று ஏற்படுத்தப்படவேண்டும். ஒரு சமஷ்டி அமைப்பின் கீழ் மத்திய அரசுக்கும் பிராந்திய நிர்வாகத்திற்கும் இடையில் அதிகாரப் பகிர்வானது நிரந்தர அமைதிக்கும் நல்லாட்சிக்கும் வழிவகுக்கும்.

இவ்வாறு யாழ்.மாவட்ட மனித நேய அமைப்புக்களின் ஒன்றியம் நேற்றைய தினம் யாழ்ப்பாணம் வருகை தந்திருந்த யப்பானிய சிரேஷ்ட துணை அமைச்சர் தலைமையிலான குழுவினரிடம் சமர்ப்பித்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பயங்கரவாத நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்குகையில் இலங்கை அரசு மிக முக்கிய புள்ளிகளுக்கும் பணக்காரருக்கும் சலுகை காட்டுகிறது என்று சுட்டிக்காட்டியுள்ள ஒன்றியம் இப்படியானவர்கள் ஐந்துலட்சம் ரூபாய்க்கும் அதிகமாக நிவாரணம் பெறுவதற்குத் தகுதி பெற்றிருக்கிறார்கள். ஆனால், மற்றவர்களுக்கோ வாழ்க்கைச் செலவீனமாக இருபத்தையாயிரம் ரூபாவும் அழிந்து போன வீடுகளை மீளக் கட்டுவதற்கு 75ஆயிரம் ரூபாவும் மட்டுமே வழங்கப்படுகிறது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் அமைதியைத் தோற்றுவிக்கத் தவறிவிட்டது. ஒப்பந்த ஷரத்துக்களையும், பேச்சுவார்த்தைகளில் எட்டப்பட்ட தீர்மானங்களையும் நிறைவேற்றுவதில் அரசாங்கம் காட்டிவரும் தயக்கமானது அமைதி நடவடிக்கையில் முட்டுக்கட்டையை ஏற்படுத்தியுள்ளது. இப்பொழுது உருவாகியுள்ள இக்கட்டான நிலைமையில் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கான பாரிய அணுகுமுறையொன்று தேவைப்படுகின்றது.

### அதியுயர் பாதுகாப்பு வலயங்கள்

பல கிராமங்கள் அதியுயர் பாதுகாப்பு வலயங்களுக்குள் வருவதால், யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 10 பத்து லட்சம் மக்களில் அரைவாசிப் பேரும் கூட தங்கள் வீடுகளுக்குத் திரும்பவில்லை. இவ்வாறு கிராமங்களைப் பிரித்திருப்பதானது, நியாயமற்றதும், சட்ட வரம்புகளுக்குட்படாததுமாகும். 2ஆயிரத்து 124 குடும்பங்கள் இடம்பெயர்ந்து அடிப்படை வசதிகளுமின்றி நலன்புரி முகாம்களில் வாழ்ந்து வருகின்றார்கள். இடம்பெயர்ந்த 20 ஆயிரம் குடும்பங்கள் நண்பர் வீட்டிலும், உறவினர் வீடுகளிலும், வாடகை வீடுகளிலும், வாழ்கின்றார்கள். எஞ்சியோர் யாழ். மாவட்டத்திற்கு வெளியிலும், வெளி நாடுகளிலும் வாழ்கின்றார்கள். இவ்வாறு இடம் பெயர்ந்துள்ள பெரும் பகுதியினர்களில் பெரும்பாலானவர்கள் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஏழ்மையும், இடம்பெயர்வும் காரணமாக பாடசாலை செல்லும் பிள்ளைகளின் எண்ணிக்கை குறைந்துள்ளது.

### விவசாயம்

வலிகாம் வடக்குப் பிரதேச விவசாயிகள் தமது விவசாய நிலங்களுக்குப் போக முடியாமல் பாதுகாப்புப்படைகளினால் தடுக்கப்பட்டுள்ளனர். இதனால் ஆயிரக்கணக்கான விவசாயிகளும் வேலையாட்களும் நாளாந்த தொழில்இன்றி கஷ்டமுறுகின்றார்கள். அத்துடன் விவசாய இடுபொருட்களை அதிகவிலை கொடுத்து வாங்குகிறார்கள். சந்தைப்படுத்தும் வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டியுள்ளது.

### மீன்பிடித்தொழில்

யாழ்ப்பாண மாவட்டத்தில் மீனவர் குடும்பங்களின் எண்ணிக்கை 12ஆயிரம் தற்பொழுது 9ஆயிரம் குடும்பங்களே உள்ளன.

கடற்படையாலும் இராணுவத்தாலும் விதிக்கப்பட்டுள்ள கடும் கட்டுப்பாடுகள் காரணமாக மீனவர்கள் இரவுபகல் மீன்பிடியில் ஈடுபடுவது தடுக்கப்பட்டுள்ளது.

வடமாகாண மீனவர் கூட்டுறவு சங்க சமாசம் ஐஸ்தொழிற்சாலையொன்றை நிறுவ எடுத்த முயற்சி பாதுகாப்புக் காரணம் காட்டி இராணுவத்தால் தடுக்கப்பட்டு விட்டது. சந்தை வசதிகளும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. வலிகாமம் வடக்கு, காரைநகர், ஊர்காவற்றுறை, நாகர் கோவில் ஆகிய இடங் களைச் சேர்ந்த மீனவர்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்வது உயர் பாதுகாப்பு வலயத்தின பேரால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

மீளக்குடியமர்ந்துள்ள 500குடும்பங்கள் தங்கள் சொந்த இடங்களில் மீளக் குடியமரமுடியாமலி

# இராணுவ வீரர் பொலிஸில் சரண்

(கொழும்பு)

கடந்த மூன்று மாதங்களுக்கு முதல காணாமல் போயிருந்த எஸ்.யூ.நசீர் என்ற இராணுவச் சிப்பாய் நேற்று மட்டக்களப்பு செங்கலடி சோதனைச்சாவடியில் சரண் அடைந்துள்ளார்.

முகமாலை இராணுவ முகா மில் கடமையாற்றி வந்த இராணுவ வீரர் கடந்த மே மாதம் 10-ம் திகதி ட்லாங்கொடையில் உள்ள தனது வீட்டுக்கு விடுமுறையில் சென்றிருந்தவேளை காணாமல் போயிருந்தார்.

மேற்படி சிப்பாய், தான் அம்பாறைக்குச் செல்லும் வழியில் இனந்தெரியா ஐந்து தமிழ் இளைஞர்களால் கடத்தப்பட்டு பண்ணை ஒன்றில் வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்த வேளை தப்பி வந்துள்ளதாக முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது இவர் மட்டக்களப்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக செங்கலடிப் பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார். (தி)

## கடற்படை - கடற்றொழிலாளர் சந்திப்பில்

# வடபகுதி மீனவர்கள் எதிர்நோக்கும் சில பிரச்சினைகளுக்குத் தீர்வு

கின்றன. (உ-47)

## கடற்படை - கடற்றொழிலாளர் சந்திப்பில்

# வடபகுதி மீனவர்கள் எதிர்நோக்கும் சில பிரச்சினைகளுக்குத் தீர்வு

(திருநெல்வேலி)

கண்காணிப்புக் குழுவினரின் மத்தியஸ்தத்துடன் பருத்தித்துறையில் உள்ள 524ஆம் பிரிகேட் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற மீனவர்கள் மற்றும் படைத் தரப்பினருக்கிடையேயான சந்திப்பில் பல முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

நேற்றைய தினம் மு.ப.10.30 மணியளவில் நடைபெற்ற இச் சந்திப்பில், வரணி படைத்தளத்தைச் சேர்ந்த லெப்.கேணல்தலாகொட, கடற்படை அதிகாரி ரத்நாயக்க ஆகியோர் உட்பட தொண்டமனாறு தொடக்கம் கற்கோவளம் வரையிலான படைத் தளத்தைச் சேர்ந்த அதிகாரிகளும், வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்கச் சமாசச் செயலாளர் எஸ். சூரியகுமார் தலைமையிலான குழுவினரும் பங்கேற்று, தற்போதைய கடல் நிலைமைகள் தொடர்பாக விரிவாக ஆராய்ந்து சில முடிவுகளை எடுத்தனர். அவையாவன,

❊சம்பந்தப்பட்ட பகுதி கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதியின் முன்னிலையிலேயே மீனவர்களின் படகுகளைப் படையினர் சோதனையிடவேண்டும்.

❊கடற்கரைகளில் வள்ளங்களை அணைப்பதற்கு குறிக்கப்பட்ட 20 இடங்களில் குழிகள் தோண்டப்படும்.

❊ஒரு படகு உரிமை மாற்றம் செய்யப்பட்டு 20 நாட்களின் பின்னரே தொழிலுக்கு அனுமதிக்கப்படும் என்ற நடைமுறையில் மாற்றம் செய்யப்பட்டு அது 5 நாட்களாகக் குறைக்கப்பட்டுள்ளது.

❊பெரிய மீன்களை எடுத்துச் செல்லும்போது கடைப்பிடிக்கப்பட்ட பெட்டிச்சோதனை முறை நீக்கப்படல் வேண்டும்.

❊படையினரின் உணவுத் தேவைக்கு பண அறவீடின்றி கடலுணவு கொடுக்க வேண்டும் என்ற நடைமுறை நீக்கப்படல் வேண்டும்.

மற்றும் இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்பிலும் முக்கிய சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

இதேவேளை, மேற்படி சந்திப்புக்கு கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் ஐவர் மாத்திரமே அனுமதிக்கப்பட்டதுடன், ஊடகவியலாளர் எவரும் உள்ளே செல்ல அனுமதிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (உ-43,4)

# முஸ்லிம் தேச சுஹதாக்கள் தினம் நேற்று அனுட்டிப்பு

## மட்டு- அம்பாறையில் வெள்ளைக்கொடிகள்

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில்1985ற்கு பின்னர் இடம் பெற்ற வன்முறைகளின் போது கொல்லப்பட்ட முஸ்லிம்களை நினைவு கூரும் வகையில் இவ்வருடம் முதல் ஆகஸ்ட் 3ஆம் திகதியை ''முஸ்லிம் தேச சுஹதாக்கள்'' தினமாக கிழக்கு மாகாண முஸ்லிம்கள் பிரகடனம் செய்துள்ளனர்.

1990ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 3ஆம் திகதி இரவு மட்டக்களப்பு காத்தான்குடியிலுள்ள பள்ளிவாசலொன்றில் 103 முஸ்லிம்கள் தொழுகையில் ஈடுபட்டிருந்த நேரத்தில் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இந்த நாளை முஸ்லிம் தேச சுஹதாக்கள் என்ற அமைப்பு இவ்வருடம் முதல் முஸ்லிம் தேச சுஹதாக்கள் தினமாகப் பிரகடனம் செய்துள்ளது.

சுஹதாக்கள் என்பது இஸ்லாத்திற்காக உயிர் துறந்த தியாகிகள் என இஸ்லாம் மதம் கூறுகின்றது.

காத்தான்குடி பிரதேச முஸ்லிம்கள் மட்டும் கடந்த 12 வருடங்களாக சுஹதாக்கள் தினத்தை பிரகடனம் செய்து அனுஷ்டித்து வந்தனர்.

இவ்வருடம் முதல் ஆகஸ்ட் 3ஆம் திகதி முஸ்லிம் தேச சுஹதாக்கள் தினமாக பிரகடனப்படுத்தப் பட்டுள்ளதையடுத்து.

மட்டக்களப்பு மற்றும் அம்பாறைமாவட்டங்களிலுள்ள சகல முஸ்லிம் பிரதேசங்களிலும் சுஹதாகளின் தினம் நேற்று உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

இதனால் நேற்றைய தினம் முஸ்லிம் பிரதேசங்களிலுள்ள வியாபாரநிலையங்கள் சந்தைகள் யாவும் மூடப்பட்டிருந்தன. அதே சமயம் பொது இடங்கள் அனைத்தும் வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப்பட்டு சுஹதாக்களை நினைவு கூரும் பதாகைகளும் பரவலாகக் கட்டப்பட்டிருந்தன. முஸ்லிம் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட மட்டக்களப்பு அம்பாறை முஸ்லிம்கள் பலரும், காத்தான்குடி மீரா ஜும்மா பள்ளிவாசலில் நேற்று முழுநாளும் இடம் பெற்ற இது தொடர்பான விசேட வைபவத்தில் கலந்து கொண்டனர். (உ-18)

குட்பட்டதாகும். 2ஆயிரத்து 124 குடும்பங்கள் இடம்பெயர்ந்து அடிப்படை வசதிகளுமின்றி நலன்புரி முகாம்களில் வாழ்ந்து வருகின்றார்கள். இடம்பெயர்ந்த 20 ஆயிரம் குடும்பங்கள் நண்பர் வீட்டிலும், உறவினர் வீடுகளிலும், வாடகை வீடுகளிலும், வாழ்கின்றார்கள். எஞ்சியோர் யாழ். மாவட்டத்திற்கு வெளியிலும், வெளி நாடுகளிலும் வாழ்கின்றார்கள். இவ்வாறு இடம் பெயர்ந்துள்ள பெரும் பகுதியினர் மீண்டும் தம் இருப்பிடங்களுக்கு திரும்பி தமது வழமையான தொழில்களில் ஈடுபட விருப்பம் கொண்டுள்ளார்கள்.

### மோசமாகப் பாதிக்கப்பட்டோர்

வலிகாமம் வடக்கு செயலர் பிரிவைச்சேர்ந்த மக்களே மிகமோசமாக பாதிக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் 1987 ஆம் ஆண்டு இடம் பெயர்ந்தவர்கள். இப்பிரிவின் காணிகளின் அளவு 58.6 சது.கி.மீ.ஆகும் இங்கே 60 வீதமானவர்கள் விவசாயிகள். இப்பகுதியின் செம்மண் தரையானது பொன்விளையும் பூமி என வர்ணிக்கப்படும்.இந்த மக்கள் போதுமான வருமானம் பெற்று சுய திருப்தியுடன் வாழ்ந்தார்கள் இதே போல் 30வீதமான மீனவர்கள் நீண்ட கரையோரப் பிரதேசத்தில் பெரும் வருமானத்தோடு வாழ்ந்தார்கள். நாட்டின் உணவுத் தேவையில் 25வீதம் இவர்களால் வழங்கப்பட்டது.

### பாடசாலைகள்

இங்குள்ள பாடசாலைகளின் மொத்த எண்ணிக்கை 495 இவற்றில் தற்போது 431பாடசாலைகள் மட்டுமே இயங்குகின்றன. உயர் பாதுகாப்பு வலயப்பகுதிகளில் 64பாடசாலைகள் இருக்கின்றன. 2002ம் ஆண்டு கணக்கின்படி மாணவர் தொகை 140,977ஆகும், ஆசிரியர்களின் தொகை 5ஆயிரத்து 625ஆகும்.

யுத்தம் காரணமாக பெரும்பாலான பாடசாலைகள் அழிந்துவிட்டன அல்லது சேதமாகியுள்ளன. சில பகுதிகளில் திருத்த வேலைகள் நடைபெறுகின்றன. தொழில்நுட்பவியலாளர்கள், மற்றும் தொழில்திறன் படைத்தவர்களின் தேவை அதிகரித்துள்ளது. அதுபோலவே மணல், மரம் போன்ற கட்டிடப் பொருள்களுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால புனரமைப்பு வேலைகள் தாமதமடைகின்றன. தளபாடங்கள், உபகரணங்களும் தேவைப்படுகின்றன.

பாடசாலைசெல்லும் சிறுவர்

...இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டு விட்டது. சந்தை வசதிகளும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. வலிகாமம் வடக்கு, காரைநகர், ஊர்காவற்றுறை, நாகர் கோவில் ஆகிய இடங்களைச் சேர்ந்த மீனவர்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்வது உயர் பாதுகாப்பு வலயத்தின் பேரால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

மீளக்குடியமர்ந்துள்ள 500குடும்பங்கள் தங்கள் சொந்த இடங்களில் மீளக் குடியமரமுடியாமலிருக்கிறார்கள்.

இலங்கைக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள பகுதிகளில் அத்துமீறி நுழையும் இந்திய மீனவர்களின் இழுவைப்படகுகளினால் இப்பகுதி மீனவர்களின் வளங்கள் பறிபோகின்றன. மீன்பிடிபொருட்கள் வலைகள் போன்றவை சூறையாடப்படுகின்றன.

### சுகாதாரம்

ஆஸ்பத்திகள் மற்றும் மருத்துவ அமைப்புகளில் நிலவும் மருத்துவ நிபுணர்கள், மருத்துவர்கள், மருத்துவ அலுவலர்கள் தட்டுப்பாடு நிவர்த்தி செய்யப்படல் வேண்டும். தெல்லிப்பளையில் உயர்பாதுகாப்பு வலயத்துக்குள்ளிருக்கும் புற்றுநோய் ஆஸ்பத்திரியை மீண்டும் திறக்க 1998இல் அனுமதி வழங்கப்பட்டிருந்த போதிலும் அங்கு 'கொல்ட்' பிரிவை இன்னமும் சுகாதார அமைச்சு அமைக்க நடவடிக்கை எடுக்காமலிருக்கின்றது.

### வேலையில்லாமை

2002ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வின்படி 82ஆயிரத்து 992பேர் வேலையில்லாமலிருக்கிறார்கள். 110,061பேர் குறைந்த வேலைகளில் இருக்கிறார்கள்.

யுத்தம் காரணமாக 3850ஆயிரத்து 502வீடுகள் முழுமையாக நாசமாக்கப்பட்டுவிட்டன. 68ஆயிரத்து 02வீடுகள் பகுதியாக சேதமாக்கப்பட்டுள்ளன.


### மனித உரிமைகள்

இலங்கை அரசமைப்புச்சட்டத்தின்படி எல்லா மனிதர்களும் சட்டத்தின் முன் சமமானவர்கள். சட்டத்தின் கீழ் சமமாக பாதுகாப்படும் உரிமையுமுடையவர்கள். இனம், மதம், மொழி, சாதி, பால், அரசியல கருத்து, பிறந்த இடம் அல்லது வேறு எந்த காரணத்துக்காகவும் பாகுபாடுகாட்டப்படமாட்டார்கள் 1979ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட பயங்கரவாதத் தடுப்புச்சட்டமானது மிகக்கொடிது அது மாற்றப்படவேண்டும்.

மனிதஉரிமைகளை மதிக்கவும் நிலைநாட்டவும் போர் நிறுத்த ஒப்பந்தத்தில் சரத்தொன்று சேர்க்கப்பட வேண்டும். (பி-4.43)

## அயோத்தியில் இராமர் கோயில்

# இந்திய அரசியல் வானில் திடீர் திருப்பங்கள் ஏற்படும் சூழ்நிலை



## வாஜ்பாய அத்வானி கருத்துக்களின் எதிரொலி

(புதுடில்லி)

**அயோத்தியில் இராமர் கோயில்கட்டப்படும் என்று பிரதம மந்திரி அடலபிஹாரி வாஜ்பாயும், உதவி பிரதமர் எல்.கே.அத்வானியும் வெளியிட்டுள்ள கருத்து இந்திய அரசியல் வானில் திடீர் திருப்பங்கள் ஏற்படுத்திவிடக்கூடிய சூழ்நிலையை உருவாக்கியுள்ளதாகக் கருதப்படுகின்றது.**

அயோத்தி பாபர் மசூதி இடிக்கப்பட்டது தொடர்பாகவும், அந்த இடத்தில் இராமர்கோயில் கட்டுவது தொடர்பாகவும் ஏற்கனவே வழக்குகள் நிலுவையில் இருந்துவரும் வேளையில் இவ்விரு தலைவர்களும் வெளியிட்டுள்ள மேற்படி கருத்து எதிர்க்கட்சிகள் மத்தியில் மட்டுமன்றி வாஜ்பாய் அரசுடன் மத்தியில் இணைந்து செயல்படும் தமிழக தி.மு.கழகமும் ஆந்திராவின் தெலுங்குதேசம்கட்சியும் அதிருப்திகொண்டுள்ளன.

ஆயோத்தியில் இராமர் கோயில் கட்டுவது பற்றிய நீதிமன்ற தீர்ப்பு வருவதற்கு முன்னரே இத்தலைவர்கள் இவ்விதக்கருத்துக்களை வெளியிட்டிருப்பது நீதிமன்ற தீர்ப்பின் தம் செல்வாக்கை மறைமுகமாக யுயோகிக் முயலகிறார்கள் அல்லது வரப்போகும் மத்திய மாநில தேர்தல்களில் இராமர் கோயில் பிரச்சினையை ஒரு பிரசார விடயமாக்கப் போகிறார்கள் என்பதையே காட்டுகின்றது என்று எதிர்கட்சிகள் கருத்து வெளியிட்டிருக்கின்றன.

அயோத்தியில், இராமர் கோயில் கட்டி, சுவாமி இராமச் சந்திரதாஸ் பரமவருன்ஸனின் ஆசையை பூர்த்து செய்வோம் என அவரது சிதையின் தீயின் முன்பாக இந்திய பிரதமரும், துணைப் பிரதமரும் சத்தியம் செய்திருக்கின்றனர்.


அத்துடன், சுவாமிகளின் இந்த ஆசையை நிறைவேற்ற ஒவ்வொருவரும் பாடுபடுவோமெனவும் பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாய் தனது இரங்கலுரையில் தெரிவித்திருந்தார்

அயோத்தியில் இராமர் பிறந்த இடத்தில் ஆலயம் கட்டப்படுவது உறுதி என்று பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாய் பேசியிருப்பது குறித்து. பல அரசியல் கட்சிகளும், முஸ்லிம் அமைப்புக்களும் பலத்த எதிர்ப்பைத் தெரிவித்துள்ளன.

அனைவரும் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு காத்திருந்து அதற்கு கட்டுப்படவேண்டுமென தெலுங்கு தேசக்கட்சித் தலைவரும் ஆந்திரப் பிரதேச முதலமைச்சருமான எம்.சந்திர பாபுநாயுடு கூறியுள்ளார்.

தேசிய ஜனநாயக கூட்டணியில் இடம்பெற்றுள்ள மற்றொரு கட்சியான தி.மு.கவும் பிரதமரின் பேச்சுக் குறித்து அதிர்ச்சி வெளியிட்டுள்ளது.

ஆளும் கூட்டணியின் செயற்றிட்டத்திலிருந்து, பிரதமர் விலகிச்



செல்வதாக எதிர்க்கட்சிகள் குற்றஞ் சாட்டியுள்ளன.

இன்று இது விடயம் குறித்து நாடாளுமன்றத்தில் கேள்வி எழும்பி அரசிடம் விளக்கம் கோரப்போவதாக அக்கட்சிகள் கூறியுள்ளன.

மார்ஸிய கம்யூனிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட்கட்சியும் தமது கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளன.

பிரதமரும் துணைப்பிரதமரும் வெளியிட்டள்ள கருத்துக்கள் துரதிஷ்டமானவை என காங்கிரஸ் கட்சி கருத்து வெளியிட்டிருக்கின்றது.

(பி-2)

# அரபாத் அலுவலகத்தில் 20 பலஸ்தீன தீவிரவாதிகள் கைதாகினர்

(ரெல்அவில்)

பலஸ்தீன தலைவர் யஸீர் அரபாத்தின் தலைமை அலுவலகத்திலிருந்த 20 பலஸ்தீன தீவிரவாதிகளை பலஸ்தீனப் படையினர் கைதுசெய்துள்ளார்.

இஸ்ரேலும்அமெரிக்காவும் தொடர்ந்து கொடுத்து வந்த அழுத்தங்களின் பின்னணியிலேயே இந்தக் கைது நடவடிக்கையினை பலஸ்தீனப் படையினர் மேற்கொண்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் ஜெரேக்கோவிலுள்ள அமெரிக்கர்களின் மேற்பார்வையுடன் திகழும் பலஸ்தீன சிறைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

இதேவேளை இஸ்ரேலிய படையினர் மேற்கொண்ட றப்பர் குண்டுத தாக்குதலில் 7வெளிநாட்டு செயற்பாட்டாளர்களும் 2பலஸ்தீனர்களும் காயமடைந்துள்ளனர்,


பலஸ்தீனத்தில் இஸ்ரேலியப் படையினர் அமைத்துள்ள பாதுகாப்பு வேலிக்கு முன்பாக தமது எதிர்ப்பினை தெரிவிக்க முயன்ற 300 இற்கும் அதிகமான பலஸ்தீன மற்றும் சர்வதேச ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது இஸ்ரேலியபடையினர் றப்பர் குண்டு தாக்குதல் மேற் கொண்டுள்ளனர்.

(பி-2)

## ஈராக் மக்களுக்கு

# சதாமின் இன்னொரு செய்தி

(துபை)



ஈராக் மக்களுக்கு அந் நாட்டு முன்னாள் அதிபர் சதாம் ஹுசைன் அனுப்பியதாகக் கூறப்படும் செய்தியை கத்தார் நாட்டின் அல்-ஜசீரா தொலைக்காட்சி வெள்ளிக்கிழமை ஒளிபரப்பியது. இது நான்கு நாட்களுக்கு முன் பதிவுசெய்யப்பட்டதாகும்.

சதாம் ஹுசைன் அனுப்பியதாகக் கூறப்படும் அந்த ஒலிப் பேழையில் நாடு இயல்பு நிலைக்கு திரும்பும் வரை நாட்டின் சொத்துகளையும்

[illegible] டத்திலிருந்து, பிரதமர் விலகிச் [illegible] கட்சி கருத்து வெளியிட்டிருக் கின்றது. (பி-2)

## தீவிரவாதிகள் கைதாகினர்

(ரெல்அவில்)

பலஸ்தீன தலைவர் யஸீர் அரபாத்தின் தலைமை அலுவலகத்திலிருந்த 20 பலஸ்தீன தீவிரவாதிகளை பலஸ்தீனப் படையினர் கைதுசெய்துள்ளார்.

இஸ்ரேலும்அமெரிக்காவும் தொடர்ந்து கொடுத்து வந்த அழுத்தங்களின் பின்னணியிலேயே இந்தக் கைது நடவடிக்கையினை பலஸ்தீனப் படையினர் மேற்கொண்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் ஜெரேக் கோவிலுள்ள அமெரிக்கர்களின் மேற்பார்வையுடன் திகழும் பலஸ்தீன சிறைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

இதேவேளை இஸ்ரேலிய படையினர் மேற்கொண்ட றப்பர் குண்டுத தாக்குதலில் 7வெளிநாட்டு செயற்பாட்டாளர்களும் 2பலஸ்தீனர்களும் காயமடைந்துள்ளனர்,

பலஸ்தீனத்தில் இஸ்ரேலியப் படையினர் அமைத்துள்ள பாதுகாப்பு வேலிக்கு முன்பாக தமது எதிர்ப்பினை தெரிவிக்க முயன்ற 300 இற்கும் அதிகமான பலஸ்தீன மற்றும் சர்வதேச ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது இஸ்ரேலியபடையினர் றப்பர் குண்டு தாக்குதல் மேற் கொண்டுள்ளனர். (பி-2)

## வெடிவிபத்தில் 45பேர் பலி; பாகிஸ்தானில் சம்பவம்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானின் வடமேற்கு பகுதி கிராமம் ஒன்றில் இடம்பெற்றபாரிய வெடிவிபத்துச் சம்பவமொன்றில் 45பேர் உயிரிழந்ததுடன் 60பேர் காயமடைந்துள்ளனர்.

பாகிஸ்தானின் வடமேற்கு பகுதியிலுள்ள டியாமின் மாவட்டத்தின் கிராமத்திலுள்ள வீடொன்றினுள் வைக்கப்பட்டிருந்த வெடிமருந்து பொருட்கள் நேற்று முன்தினம் இரவு திடிரென தீப்பற்றிக்கொண்டதில் இச்சம்வம் நிகழ்ந்துள்ளது.

இவ் வெடிமருந்துப பொருட்கள் எதற்காக அந்த வீட்டில் வைக்கப்பட்டிருந்தன என்பது குறித்த தெளிவான விபரங்கள் எதுவும் உடன் தெரியவரவில்லை என்றும் சன நெருக்கடி மிகுந்த பகுதியில் இவ்வீடு [illegible] இந்தளவு [illegible] நேர்ந்துள்ளதென [illegible] தெரிவிக்கின்றனர். (பி-2)

## சியராலியோன் புரட்சி இயக்கத்தலைவர் மரணம்

(பிரிடவுன்)

சியாராலியோன் புரட்சித்தலைவர் பொடே சாங்கோஷ் மரணமானார்.

பத்து வருடங்களாக பயங்கரவாத இயக்கத்தின் தலைவராக இருந்தவர் இவர் போர்க்கால குற்றங்களுக்கான விசாரணை மன்றத்தின பாதுகாப்பில் இருந்த வேளை மரணமானார் என ஐ.நா அதிகாரிகள் தெரிவித்தனர்.

புரச்சிகர ஐக்கியமுன்னணி என்றபெயரில் இவரால் ஆரம்பிக்கப்பட்ட இயக்கம் பெரும் கற்பழிப்புக்கள், கைகால்களைத் தூண்டிப்பது போன்ற குற்றச்செயல்களுக்கும் போபோயிருக்கிறது. 10 ஆண்டுகளாக நடைபெற்று வந்த உள்நாட்டு யுத்தத்தின்போது ஆயிரக்கணக்கான மக்களின் காதுகள், மூக்குகள் மற்றும் உறுப்புக்களை அறுத்து கொடுமை புரிந்துள்ளது.

[illegible] பிரிட்டவுணில் 2000ஆம் ஆண்டில் இவர் பிடிக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டு [illegible] பாரிசவாதத்தினால் பாதிக்கப்பட்டிருந்து சாவ்கோஹ் இயற்கையாக மரணத்தைத் தழுவிக் கொண்டார் என அறிவிக்கப்பட்டது. (பி)

WORLD NEWS உலக தரிசனம்

## விஜயநகர பேரரசின் குளம் கண்டுபிடிப்பு

(பெல்லாரி)


பெல்லாரில் விஜயநகரப் பேரரசு காலத்தைச் சேர்ந்த குளத்தை இந்திய தொல் பொருள் ஆராய்ச்சித துறையினர் கண்டுபிடித்தனர்.

விஜய விட்டலா கோவில் அருகே. இக்குளம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 1986-ம் ஆண்டில் மகாநவமி திப்பை அருகே ஒரு குளத்தை இந்திய தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் கண்டுபிடித்தனர். தற்போது 2ஆவது குளத்தைக் கண்டுபிடித்துள்ளனர்.

புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட குளத்திலிருந்து தண்ணீர் வெளியேற்றப்பட்டுவருகிறது. (பி)

## ஈராக் மக்களுக்கு சதாமின் இன்னொரு செய்தி

(துபை)



ஈராக் மக்களுக்கு அந் நாட்டு முன்னாள் அதிபர் சதாம் ஹுசைன் அனுப்பியதாகக் கூறப்படும் செய்தியை கத்தார் நாட்டின் அல்-ஜசீரா தொலைக்காட்சி வெள்ளிக்கிழமை ஒளிபரப்பியது. இது நான்கு நாட்களுக்கு முன் பதிவுசெய்யப்பட்டதாகும்.

சதாம் ஹுசைன் அனுப்பியதாகக் கூறப்படும் அந்த ஒலிப் பேழையில் நாடு இயல்பு நிலைக்கு திரும்பும் வரை நாட்டின் சொத்துகளையும் பாத் கட்சியின்(சதாமின்கட்சி) சொத்துகளையும் பாதுகாக்குமாறு நாட்டு மக்களை அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (பி)



மலைப்பாம்பைக் கையிலும் நல்ல பாம்பைக் கூடையிலும் வைத்துள்ள இவர்கள் பாம்பாட்டிகள் இல்லை. மகாராஷ்டிர மாநில தானே நகரின் பாம்பாட்டிகள் வைத்திருந்த பாம்புகளை நாகபஞ்சமி தினத்தில் (சனிக்கிழமை) கைப்பற்றிய [illegible] அமைப்பினர். பாம்புகளை [illegible] தெரிவிக்கனர்.

## எரிவாயு சிலிண்டர் வெடித்தது

## 5பேர்பலி; 33பேருக்குகாயம்

### குஜராத்தில் சம்பவம்

(சென்னை)

குஜராத்தில் நேற்று அதிகாலை இடம் பெற்ற எரிவாயு சிலிண்டர் வெடிப்புச் சம்பவத்தில் 5 பேர் கொல்லப்பட்டதுடன்33 பேர் காயமடைந்துள்ளனர்.

இச்சம்பவத்தில் 3அடுக்கு மாடிக் கட்டடம் முற்றாக சேதமடைந்துள்ளதெனவும் மேலும் 100 பேர்வரை இதன் இடிபாடுகளுக்குள் சிக்கியிருக்கலாம் என்றும் அஞ்சப்படுகிறது.

எரிவாயு சிலிண்டர் வெடித்தே இச்சம்பவம் நிகழ்ந்ததாக கூறப்படுகின்றபோதும்,பயங்கரவாதிகளின் நடவடிக்கை இப்பகுதியில் அதிகமாக காணப்படுவதனால் இது அவர்களது தாக்குதல் நடவடிக்கையாகவே இருக்குமென குஜராத் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (பி-2)

# தங்கத் தாம்பாளமும் தறிகெட்ட மனிதரும்

ஒருவரைப்பார்த்து ''இதயம் இல்லாதவன்'' என்று கூறினால் அவருக்கு இதயமே இல்லை என்று அர்த்தமாகாது. இரக்கம் அற்ற மனிதர் என்பதையே குறிக்கும். ஏனென்றால் இதயம் இல்லாமல் எவரும் பிறப்பதில்லை.

ஆனால் இதயம் இருந்தும் இரக்கமே இல்லாத மனிதர்கள் பலரைக் காண்கின்றோம். இப்படியானவர்களில் பலர் தமக்கும் தம்மைச் சார்நதவர்களுக்கும் மாத்திரம் இரங்குவார்கள். ஆனால், ஏனையவர்களிடம் இரக்கமில்லாமல் நடந்து கொள்வார்கள்.

உலகில் உள்ள எல்லா உயிர்களும், பொருள்களும் மனிதனுக்கு உதவுகின்றன. ஆனால், ஆறறிவு படைத்த மனிதன் தான் பிறர்க்கு உதவுவதில தயக்கம் காட்டுகிறான் என்கின்றார் சுவாமி சிவானந்தர்.

பிறருக்காக இதயத்தை இளகச் செய்பவன் இறைவன் நிலைக்கு உயர்கின்றான்.

காசி விசுவநாதர் ஆலயத்தில் ஒரு தினம் தங்கத்தினால் ஆன தாம்பாளம் ஒன்று வந்து விழுந்தது. அதனை எடுத்து என்ன செய்வது

அவர் கையின் மீது தாம்பாளத்தை வைக்கவும் அது எவ்வளவு பிரகாசத்தோடு இருந்ததோ, அந்தளவுக்கு நேர்மாறான இரும்புத்துண்டாக மாறி விட்டது.

இவ்வாறு பல நாட்கள் சென்றன. எவருமே தாம்பாளத்தைப் பெற்றுக் கொள்ளும் தகுதியுடையவர்களாய் வரவில்லை.

ஒருதினம் வெகு தூரத்தில் இருந்து ஒரு விவசாயி கோயில் தரிசனத்திற்காக வந்தான். கோயிலில் இவ்வளவு பேர் தாம்பாளத்தைப் பெற்றுக் கொள்ள முண்டியடிப்பது பற்றி அவனுக்குத் தெரிந்திருக்கவில்லை.

கோயில் வீதிகளில் குழுமியுள்ள ஏழைகளையும் நோயாளிகளையும் கண்டு இரங்கிக் கண்ணீர் வடித்தான். ஒரு தொழுநோயாளி நிலத்தில் கிடந்து அழுந்துவதைப் பார்த்து அவனருகில் அமர்ந்து ''நண்பனே, மனந்தளராதே, கடவுள் மிகவும் கருணையுள்ளவர், உனக்கு அவர் கருணை கிடைக்கும்'' என்று ஆறுதல் கூறினான். பின் கோயிலில் சென்று இந்தத் துன்பப்படும் மனிதர்கள் அனைவருக்காகவும் வேண்டிக்கொண்டு திரும்பினான்.

பாத்திமா சுகமாகி வருகிறாள்.

அவள் தந்தை சஜ்ஜாத் கராச்சியில் பனனாட்டு உரக் கம்பனியொன்றில் பணிபுரியும் ஒரு விஞ்ஞானி. அவர் கூறினார்;

''பாத்திமா பிறந்தவுடன் அவளது இதயம் வேகமாக அடித்துக் கொண்டிருந்தது. ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றோம். அங்குதான் அவளது இதயத்தின் நிலைமை எங்களுக்குத் தெரியவந்தது. குடும்பத்தில் இவள் மூன்றாவது பிள்ளை'' என்று.

உற்சாகமாகவும், குறும்புத்தனமாகவும் நடந்துகொள்ளும் பாத்திமாவுககு தனது இதயத்தின் நிலைமை தெரிந்திருக்கவில்லை. புதுடில்லியிலும், பங்களூரிலும் அறிமுகம் இல்லாதவர்கள் எல்லாரும் வந்து அவளைப் பற்றி விசாரித்து அறிந்த போதும், பல்வேறு சோதனைகளின் போதும் அவள் அலட்டிக் கொள்ளாமல் வழமைபோல் இருந்தாள். தொலைக்காட்சி நிருபர்கள் அவளது பெற்றாருடன் பேட்டிகள் எடுத்துக் கொண்டிருந்த வேளையில் அவள் பூச்செண்டுகளை வைத்துத் துள்ளி விளையாடிக் கொண்டிருந்தாள்.

அறுவைச் சிகிச்சைக்காக

யற்ற பாகிஸ்தான் குழந்தைகளுக்கான ஒரு நிதியத்தில் வைப்பிலிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேமாதிரியான ஒரு அறுவைச் சிகிச்சையை அமெரிக்காவில் நடத்துவதானால், 70 ஆயிரம் அமெரிக்க டொலர் தேவைப்படும். இது பாத்திமாவுக்குச் செலவான தொகையை விட 25 மடங்கு அதிகமாகும்.

✡ ✡ ✡

நூர் பாத்திமாவின் இதய சிகிச்சை பாகிஸ்தான், இந்தியா நாடுகளுக்கிடையிலான உறவை மேலும் நெருங்கச் செய்திருக்கும் அதேவேளை இதேவிதமான ஒரு செயற்பாடு மத்திய கிழக்கில் நடந்துள்ளது.

பலஸ்தீன சிறுவன் ஒருவனின் இதயம், சிறுநீரகம், நுரையீரல் ஆகிய உறுப்புக்களைக் கொண்டு ஸ்ரேலியக் குழந்தைகள் மூவர் பிழைக்க வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

பலஸ்தீனருக்கும், இஸ்ரேலியருக்கும் இடையில் இருந்து வரும் பகைமையும், போராட்டங்களும் உலகப் பிரசித்தமானவை. இந்த நிலையில் பலஸ்தீன சிறுவனின் உறுப்புகள் இஸ்ரேலிய நாட்டின் சிறுவர்களுக்கு உதவியிருப்பது மகிழ்ச்சிக்குரிய ஒரு விடயம்.

மனிதர்கள் ஒன்றாயிருப்பதும் அடித்துக் கொள்வதும் மனோநிலையைப் பொறுத்த விடயம்.

விபத்தொன்றில் மூளை இயங்காமல் போன பலஸ்தீன சிறுவனின் உறுப்புகளே இவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளன.

இந்த உறுப்புக்களை வழங்கிய சிறுவனின் உறவினர்கள் துக்கமும்,

1999 இல் ஓய்வு பெற்றார். ஆனால் எப்போதும்போலவே புகழுடன் விளங்குகின்றார்.

மண்டேலா வருடாந்த உரைகள பல நாடுகளில் இடம்பெற்றன. முன்னாள் அமெரிக்க அதிபர் பில் கிளின்டன் உரை நிகழ்த்தியவர்களில் ஒருவர். 1600 பேர் கலந்துகொண்ட கௌரவ விருந்தொன்றில் பார்பரா ஸ்ரீசன்ட், மைக்கல் ஜெக்ஸன் முதலியவர்கள் கலந்து கொண்டார்கள்.

ஜோஹன்னஸ் பேர்க்கில் நெல்சன் மண்டேலா பாலம் திறந்துவைக்கப் பட்டது. மண்டேலா நிகழ்த்தியுள்ள பிரபலயமான உரைகளும், உலகத் தலைவர்கள் வழங்கிய பாராட்டுரைகளும் அடங்கிய புத்தகம் அவருக்கு வழங்கப்பட்டது.

ஜேர்மன் அதிபர் மண்டேலாவுக்கு அனுப்பியிருந்த பாராட்டுரையில் உலகில் விடுதலை, நீதி, நல்லிணக்கத்திற்கான விருப்பம் ஆகியவற்றிற்காகத் தங்கள் பெயர் நிலைத்திருக்கும் என்று கூறியிருந்தார். நெல்சன் மண்டேலா 1918இல் பிறந்தார். ஒரு ஆபிரிக்கப் பழங்குடித் தலைவரின் புதல்வர். 12 வயதாய் இருக்கும் போது, தந்தை மறைந்தார். அப்பழங்குடியின் மிக முக்கிய தலைவர் நெல்சன் மண்டேலாவைத் தன் பொறுப்பில் எடுத்துக் கொண்டு அவரது வளர்ச்சிக்கும் படிப்புக்கும் உதவினார். சட்டத்துறையில் பட்டம் பெற்றபின் வழக்கறிஞராகத் தொழில் பார்த்தார். 1944 இல் 26 வயதில் ஆபிரிக்க தேசிய சபையில் சேர்ந்தார். அந்த அமைப்பை விடுதலையை நோக்கிய நிறுவனமாக மாற்றியமைத்தார். உரிமைப் போராட்டங்களைத் தொடர்ந்து நடத்தினார். அதன் காரணமாக பல தடவைகளிலும் சிறைக்குச் சென்றார். வெள்ளையரின் கொடுமை அவரை ஒன்றும் செய்து விடவில்லை. சிறையில் இருந்தபடியே போராட்டங்களை நடத்தினார்.

### எண் இறந்த நட்சத்திரங்கள்

பூமியின் இருண்ட பகுதிகளில் இருந்து ஒருவர் வானத்தைப் பார்த்தால் அவரது வெற்றுக் கண்களுக்கு 5, 000 நட்சத்திரங்கள் தான் அங்கு தெரியும். அவரே ஒரு பிரகாசமான தெருவீதியில் இருந்து வானத்தைப் பார்ப்பாரானால் சுமார் 100 நட்சத்திரங்களைத் தான் காண்பார். ஆனால் நவீன தொலை நோக்கிகள் தரும் விபரம் ஆச்சரியமானது. பிரபஞ்சத்தின் ஒரு பகுதியில் உள்ள நட்சத்திரக கூட்டங்களின் முழு ஒளி அளவையும் (பிரகாசத்தை) சக்திவாய்ந்த நவீன கருவிகளைப் பயன்படுத்தி

## இதயங்களைத் திறந்துவிட்ட இதயம்

என்று அறியாது பிரதம குருவும், மற்றவர்களும் திகைத்து நின்றபோது, அசரீரி ஒன்று கேட்டது. எவன் ஒருவன் உண்மையாக சக மனிதர்களை நேசிக்கிறானோ அவனுக்கே இந்தத் தாம்பாளம் உரியது. அவனை அறிந்து இதனை வழங்குக என்று அறிவிக்கப்பட்டது.

பிரதம குருவும் ஆலய நிர்வாகிகளும் மற்றவர்களும் கூடி ஆராய்ந்து அறிவித்தல் ஒன்று விடுத்தார்கள். பிற மனிதர்களை உண்மையாக நேசிக்கிறவர்கள் வந்து இந்தத் தங்கத் தாம்பாளத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என்று.

கேட்கவேண்டுமா? ஊரிலுள்ள பெரிய மனிதர்கள், பணக்காரர்கள், கோயில் தர்மகர்த்தாக்கள் என்று எல்லாருமே வரிசை வரிசையாக வந்து நின்றார்கள். தங்கத் தாம்பாளத்தைப் பெற்றுச் செல்வதற்காக.

ஆனால், வந்தவர்கள் எவராலுமே தாம்பாளத்தைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. காரணம் அவர்கள் தாம்பாளத்தைத் தொட்ட மாத்திரத்தில் தாம்பாளம் இரும்பாக மாறி விட்டது. என்றாலும், தாம்பாளத்தைப் பெற்றுக் கொள்வதற்காக வந்தவர்களின் வரிசை குறையவில்லை. அது நீண்டுகொண்டே போயிற்று

தங்கத் தாம்பாளத்தைப் பெற்றுக் கொள்ள முண்டியடிக்கும் மனிதர்களைப் பற்றி அவன் அலட்டிக் கொள்ளவே இல்லை.

அவன் போவதைப் பார்த்த பிரதம குருவானவர், ''அப்பனே இங்கு ஒருதரம் வந்துவிட்டுப் போவாய்'' என்றார். அவன் மிகவும் பணிவோடு அவரிடம் சென்றான்.

''இதோ, இந்தத் தாம்பாளம் உனக்கு உரியதாய் இருக்கலாம் பெற்றுக்கொள்'' என்றார். அவன் தயங்கி நின்றபோது குருவானவர் தாம்பாளத்தை அவன் கைகளில் வைத்தார். அது முன்பு இருந்ததை விட பன்மடங்கு பிரகாசமாக ஜொலித்தது. அவனிடமே தாம்பாளத்தைப் பிரதம குருவானவர் கொடுத்தார்.

பேராசையில்லாத அம்மனிதன் அதனை கோயில் தர்ம காரியங்களுக்கே கொடுத்திருப்பான் என்று சொல்லவேண்டுமா?

### இதயத்தைக் கவர்ந்த பாக்.சிறுமி

இதயத்தில் ஏற்பட்டிருந்த ஓட்டைகளை அடைத்துக் கொள்வதற்காக இந்தியா வந்திருந்த இரண்டரை வயதான பாகிஸ்தான் சிறுமி குண

பாத்திமாவை தியேட்டருக்குள் கொண்டு போகப்பட்டதில் இருந்து வெகு நேரம் வரை தாயும் தகப்பனும் வெளியில் அமைதியறறு காத்துக் கொண்டிருநதார்கள். டாக்டர் ராஜேஷ்சர்மா அறுவைச்



சிகிச்சை அறையில் இருந்து வெளியில்

மகிழ்ச்சியும் கலந்த மனோநிலை

தாம்பாளம் உரியது. அவனை அறிந்து இதனை வழங்குக என்று அறிவிக்கப்பட்டது.

பிரதம குருவும் ஆலய நிர்வாகிகளும் மற்றவர்களும் கூடி ஆராய்ந்து அறிவித்தல் ஒன்று விடுத்தார்கள். பிற மனிதர்களை உண்மையாக நேசிக்கிறவர்கள் வந்து இந்தத் தங்கத் தாம்பாளத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என்று.

கேட்கவேண்டுமா? ஊரிலுள்ள பெரிய மனிதர்கள், பணக்காரர்கள், கோயில் தர்மகர்த்தாக்கள் என்று எல்லாருமே வரிசை வரிசையாக வந்து நின்றார்கள். தங்கத் தாம்பாளத்தைப் பெற்றுச் செல்வதற்காக.

ஆனால், வந்தவர்கள் எவராலுமே தாம்பாளத்தைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. காரணம் அவர்கள் தாம்பாளத்தைத் தொட்ட மாத்திரத்தில் தாம்பாளம் இரும்பாக மாறி விட்டது. என்றாலும், தாம்பாளத்தைப் பெற்றுக் கொள்வதற்காக வந்தவர்களின் வரிசை குறையவில்லை. அது நீண்டுகொண்டே போயிற்று. மேலும், தாம்பாளத்தைப் பெற்றுக்

## அன்றும் இன்றும்

கொளளும் ஆசையில் வசதி படைததவர்களின் தர்ம காரியங்களும் அதிகரித்தன. அதனால், கோயில் வீதிகளில் நோயாளிகளும், ஏழைகளும் வந்து நிலை கொள்ளத் தொடங்கி விட்டார்கள். முன் எப்போதும் இல்லாது, அவர்களில் அக்கறைப்படுவோரும், ஆதரிப்போரும் அதிகரித்து விட்டார்கள். இதனால், பிச்சைக்காரர்களின் எண்ணிக்கையும் அதிகரித்தது.

அந்தப் பகுதியிலேயே மிகப் பெரிய பணக்காரரும், பிரமுகருமான ஒருவர் தமது சொத்துக்களில் பெரும் பகுதியையும் ஏழைகளுக்கும் துன்பமுறும் மக்களுக்கும் செலவழித்து விட்டு வரிசையில் நின்றார். அவர் செய்த தர்ம காரியங்களைப் பார்த்து விட்டு மற்றவர்கள் ஒதுங்கி வழிவிட்டார்கள்.

தங்கத் தாம்பாளம் அவருக்கே கிடைக்கப்போகிறது என்று ஆலய குருவும் கருதினார். மிகவும் பணிவாகவும், பண்பாகவும் எல்லாரையும் வணங்கிக் கொண்டு அந்தப் பெரியவர் பிரதம குருவின் முன் போய் நின்றார். குருவும் மிகவும் மகிழ்சசியோடு தாம்பாளத்தை எடுத்து அவரிடம் கொடுத்தார்.

என்ன ஆச்சரியம், தாம்பாளத்தைப் பெற்றுக்கொள்ள அவரே தகுதியானவர்என்று எல்லாரும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தவேளையில், அவர் தாம்பாளத்தைப் பெற்றுக்கொள்ளக் கையை நீட்டவும், குருவானவர்

தம குருவானவர், ''அப்பனே இங்கு ஒருதரம் வந்துவிட்டுப் போவாய்'' என்றார். அவன் மிகவும் பணிவோடு அவரிடம் சென்றான்.

''இதோ, இந்தத் தாம்பாளம் உனக்கு உரியதாய் இருக்கலாம் பெற்றுக்கொள்'' என்றார். அவன் தயங்கி நின்றபோது குருவானவர் தாம்பாளத்தை அவன் கைகளில் வைத்தார். அது முன்பு இருந்ததை விட பன்மடங்கு பிரகாசமாக ஜொலித்தது. அவனிடமே தாம்பாளத்தைப் பிரதம குருவானவர் கொடுத்தார்.

பேராசையில்லாத அம்மனிதன் அதனை கோயில் தர்ம காரியங்களுக்கே கொடுத்திருப்பான் என்று சொல்லவேண்டுமா?

## இதயத்தைக் கவர்ந்த பாக்.சிறுமி

இதயத்தில் ஏற்பட்டிருந்த ஓட்டைகளை அடைத்துக் கொள்வதற்காக இந்தியா வந்திருந்த இரண்டரை வயதான பாகிஸ்தான் சிறுமி குணமாகி தாய்நாடு திரும்பியிருக்கிறாள்.

நூர் பாத்திமா என்ற இந்தச் சிறுமியின் ஒரு இதயத்தைத் திறந்து சிகிச்சையளித்தார்கள் இந்திய டாக்டர்கள். அவளோ இந்தியர்கள் ஆயிரக் கணக்கானவர்களின் இதயங்களைத் திறந்து விட்டுள்ளாள்.

இதயக் கோளாறினால் அவஸ்தைக்குள்ளாகியிருந்த இச்சிறுமி அறுவைச் சிகிச்சைக்குட்படாது விடின், 10 ஆண்டுகளுக்கு மேல் உயிர் வாழப் போவதில்லை என்று டாக்டர்கள் கூறியிருந்தனர். இப்பொழுது அவருக்கு இதய அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டு விட்டதால், 10 வருடங்களுக்கு மேலும் அவளால் வாழ முடியும் என்று நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையிலான அமைதிப் பேச்சுக்களை முன்னெடுப்பதற்கான ஒரு முன்னோடி நடவடிக்கையாக, பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பயணிகள் பஸ் போக்குவரத்து மீண்டும் ஆரம்பமானபோது நூர் பாத்திமா என்ற இந்தச் சிறுமி அவருடைய பெற்றாருடன் இந்தியாவுக்கு வந்தாள்.

இதயத்தில் ஓட்டைகளும், வால்வு (Valve) கோளாறுகளும் ஏற்பட்டிருந்தமையால், நூர் பாத்திமாவை தந்தை நாடீம் சஜ்ஜாத்தும், தாய் தயாபாவும புதுடில்லிக்கு அழைத்து வந்து கர்நாடகாவிலுள்ள பங்களூர் நாராயணா இருதய ஆஸ்பத்திரியில் சேர்த்தனர்.

தென் ஆசியாவிலேயே குழந்தைகளுக்கான இருதய நோய் ஆஸ்பத்திரிகளில் இந்த ஆஸ்பத்திரி தனித்துவமானது, நிபுணத்துவ சிகிச்சைக்குப் பேர் போனது. அவளது இதயத்தில் இருந்த இரு ஓட்டைகள் அடைக்கப்பட்டு வால்வுகளும் சரி செய்யப்பட்டதன் பின் இப்பொழுது டாக்டர் ராஜேஷ்சர்மா அறுவைச்



சிகிச்சை அறையில் இருந்து வெளியில் புன்முறுவலோடு சென்றதைக் கண்டபோதுதான்அவர்களுக்கு பெரும் ஆறுதலாக இருந்தது. பாத்திமாவின் இதய அறுவைச் சிகிச்சையை மேற்கொண்டவர் அவரே.

பாத்திமா வளர்ந்து படித்துப் பெரியவளானதும் இதய அறுவைச் சிகிச்சை நிபுணராக வேண்டுமென்று

அவருடைய தந்தை விரும்புகின்றார்.

பாத்திமாவுக்கு நல்ல சுகம் ஏற்படவேண்டும் என்று ஏராளமான இந்தியர்கள் செய்திகளும், கடிதங்களும், பூச்செண்டுகளும் அனுப்பித் தங்களின் அன்பையும் அக்கறையையும் வெளிப்படுத்தியிருந்தார்கள். பங்களூருக்கு பாத்திமா குடும்பம் காரில் சென்றபோது வீதிகளில் சிறுவர், சிறுமியர் ''விரைவில் குணமாகுக'' என்று எழுதிய அட்டைகளை தாஙகி நின்றது இதயங்களை நெகிழ வைப்பதாய் இருந்தது.

வெளிநாட்டவரிடம் லஞ்சம் வாங்குவதில் பேர்போன நகரப் பொலிஸாரும்கூட பாத்திமா குடும்பம் பதிவு செய்ய வந்தபோது மிகவும் மரியாதையுடன் நடந்து கொண்டனர்.

கர்நாடக அரசு அறுவைச் சிகிச்சைக்கு பணம் வழங்குவதாக அறிவிததது. ஆஸ்பத்திரியும் ரூ.140, 000 கட்டணத்தை விட்டுக்கொடுத்தது. ஆனால், தமக்கு நிதிப் பிரச்சினை இல்லை என்று கூறி சஜ்ஜாத் இந்த பங்களிப்புக்களை மறுத்து விட்டார். இந்தப் பணமும் இனி வரக்கூடிய பணமும் சஜ்ஜாத்தின் 50 ஆயிரம் ரூபாவுடன் சேர்த்து இனி அறுவைச் சிகிச்சைக்காக வரப்போகும் வசதி

சிறுவனின் உறவினர்கள் துக்கமும், மகிழ்ச்சியும் கலந்த மனோநிலையில் வரவேற்றிருக்கிறார்கள்.

✡ ✡ ✡

மதிப்புக்குரிய மாமா (அங்கிள்) என்று சிலர் அவரை மதிக்கிறார்கள். இன்னும் சிலர் ஒரு பாடகரைபபோல ரசிக்கறார்கள். மற்றவர்கள் அவரை ஒரு சமயத் தலைவர் போல வணஙகுகிறார்கள்.

## மதிப்பிற்குரிய மாமா நெல்சன் மண்டேலா

கடந்த 25 ஆம் திகதி தென்னாபிரிக்காவில் எல்லா இனத்தவர்களும், வயதினரும் ஏன் முழுநாடுமே அவரது 85ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடினார்கள். அவர் தான முன்னாள் தென்னாபிரிக்க அதிபரும், சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்றவருமான நெல்சன் மண்டேலா.

செய்திப் பத்திரிகைகள் பிறந்த நாள் மலர்கள் வெளியிட்டன. தொலைக்காட்சி நிலையங்கள் விசேட நிகழ்ச்சிகள் நடத்தின. தென்னாபிரிக்க விமானசேவை நிறுவனம் மண்டேலா சேர்விஸ் என்று பெயரிட்டு விசேட விமானம் ஒன்றைப் பறக்க விட்டது. அந்த விமானம் மண்டேலாவின் வீட்டுக்கு மேலாகப் பறந்து அவருக்கு வாழ்த்துக் கூறியது.

27 ஆண்டுகள் வெள்ளையரால் சிறை வைக்கப்பட்டு கொடுமைப் படுத்தப்பட்டவரான மண்டேலா எது வித குரோத உணர்வுமின்றி இன நல்லிணக்கத்தைப் பற்றி மக்கள் மத்தியில் பிரசாரம் செய்கிறார் இன்று.

இன ஒதுக்கல் அரசு வீழ்ந்ததை அடுத்து 1994 ஆம் ஆண்டு சகல இன மக்களும் கலந்துகொண்ட முதல் அதிபர் தேர்தலில் மண்டேலா வெற்றி பெற்றார்.

தார். உரிமைப் போராட்டங்களைத் தொடர்ந்து நடத்தினார். அதன் காரணமாக பல தடவைகளிலும் சிறைக்குச் சென்றார். வெள்ளையரின் கொடுமை அவரை ஒன்றும் செய்து விடவில்லை. சிறையில் இருந்தபடியே போராட்டங்களை நடத்தினார்.

## எண் இறந்த நட்சத்திரங்கள்

பூமியின் இருண்ட பகுதிகளில் இருந்து ஒருவர் வானத்தைப் பார்த்தால் அவரது வெற்றுக் கண்களுக்கு 5, 000 நட்சத்திரங்கள் தான் அங்கு தெரியும். அவரே ஒரு பிரகாசமான தெருவீதியில் இருந்து வானத்தைப் பார்ப்பாரானால் சுமார் 100 நட்சத்திரங்களைத் தான் காண்பார். ஆனால் நவீன தொலை நோக்கிகள் தரும் விபரம் ஆச்சரியமானது. பிரபஞ்சத்தின் ஒரு பகுதியில் உள்ள நட்சத்திரக கூட்டங்களின் முழு ஒளி அளவையும் (பிரகாசத்தை) சக்திவாய்ந்த நவீன கருவிகளைப் பயன்படுத்தி அவுஸ்ரேலிய விஞ்ஞானிகள் அளந்துள்ளார்கள். இதன்மூலம் அந்தப் பகுதியில் எத்தனை நட்சத்திரங்கள் இருக்கக்கூடும் என்பதையும் கணித்திருக்கிறார்கள்.

இந்தக் கணிப்பைக் கொண்டு கண்ணுக்குத் தெரியும் பிரபஞ்சத்தில் எத்தனை நட்சத்திரங்கள் இருக்க முடியும் என்ற ஒரு முடிவை எடுத்துள்ளார்கள். இது முன்பு கணிக்கப்பட்டிருந்ததை விட மிகவும் சரியானதாக இருக்கும் என்று அவர்கள் கருதுகிறார்கள். இந்தக் கணிப்பின் முடிவு சிட்னியில் நடைபெற்ற சா[illegible] வானியல் கழக மகாநாட்டின் முன் வைக்கப்பட்டது. இந்தக் கணிப்பின் முடிவின்படி வானியல் கணக்கில் 70 Sextillion அதாவது எண் ஏழுக்குப் பின்னால் 22 பூஜ்ஜியங்களைச் சேர்த்தால் வரும் எண்ணாகும். இன்னும் விளக்கினால், பூமியில் உள்ள கடற்கரைகள், பாலைவனஙகள் எல்லாவற்றிலும் காணப்படுகின்ற மணற் குருணிகளைக் கணக்கெடுத்தால் வரும் எண்ணிக்கைக்கு ஒப்பிடலாம். அதுவும் எமது தொலை நோக்கியால் காணக்கூடிய எல்லைக்குட்பட்டது மட்டுமே.

அவுஸ்ரேலிய பல்கலைக் கழகத்தைச சேர்ந்த டாக்டர் சிமோன் [illegible]வர் இந்த எண்ணிக்கை இன்னும் இன்னும் அதிகமாகவே இருக்கும் என்கிறார். பிரபஞ்சத்தில் உள்ள பல நட்சத்திரங்களுக்கு கோள்களும் உண்டு. சிலவற்றில் உயிரினமும் இருக்கலாம். ஆனால் [illegible] டன் நாம் ஒருபோதும் [illegible] கொள்ள முடியாது என்கிறார் அவர்.

அன்பன்

## வடக்கு - கிழக்கில் வாழ்கின்ற

# அனைவரினதும் ஒத்துழைப்புடனேயே இடைக்கால அரசு அமையவேண்டும்

### அஸ்கிரிய பீட மகாநாயகர் வண.புத்திரகித்த தேரர்

(கொழும்பு)

அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தற்போது தடைப்பட்டிருக்கும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் முன்னெடுப்பதற்கு, இடைக்கால நிர்வாகம் கோருகின்ற பிரதேசங்களில் உள்ள எல்லாத் தரப்பினரினதும் முழு ஒத்துழைப்பும் கிடைக்கவேண்டும். இதுவே எமது விருப்பமாகும் என அஸ்கிரிய பீட மகாநாயகர் வண.புத்திரகித்த தேரர் தெரிவித்துள்ளார்.

வட - கிழக்கிற்காக வழங்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாகசபைத் திட்டவரைபில் உள்ள சிக்கல்கள் குறித்து கருத்துக் கூறியபோதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது விடயம் சம்பந்தமாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

நிரந்தர சமாதானம் ஒன்றை ஏற்படுத்தும் நோக்கில் முன்னெடுத்து வரும் பேச்சுவார்த்தைகளில் இரண்டு தலைவர்களிடையேயும் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டுக்கொண்டிருப்பது நாட்டில் நிரந்தர சமாதானத்திற்கு தடைக்கல்லாகவே அமையும்.

இவ் இரு தலைவர்களினதும் இவ்வாறான செயற்பாடுகள் மூலம் நாட்டு மக்களுக்கு மாத்திரமின்றி சர்வதேச சமூகத்திற்கும் நிரந்தர சமாதானத்திற்கான நம்பிக்கைகள் தகர்ந்து போய்விடக்கூடிய சாத்தியம் உண்டு.

அதேசமயம், வட - கிழக்கில் உள்ள அனைத்துச் சமூகங்களையும் கருத்திற் கொண்டு, புரிந்துணர்வான ஓர் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்கவேண்டியது அவசியம் எனக் குறிப்பிட்டுள்ள அஸ். பட மகாநாயக்கர், இவ்வாறான சமாதான வழிமுறைகளை விடுத்து வீண் அதிகாரங்களை பயன்படுத்தி வேறு செயற்பாடுகளில் ஈடுபடுவது அர்த்தமற்ற விளைவுகளை உண்டாக்கும் எனவும் தெரிவித்துள்ளார். (உ-18)

## பிரதமர் - ஜனாதிபதி

# முரண்பாடுகள் அதிகரித்தால் பொருளாதாரம் பாதிப்படையும்

### பிரதிநிதியமைச்சர் எச்சரிக்கை

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும், ஜனாதிபதி சந்திரிகாவிற்கும் இடையிலான கருத்து முரண்பாடுகள் மேலும் அதிகரிக்குமாயின், அது நாட்டின் பொருளாதார அபிவிருத்தியைப் பாதிக்குமென பிரதிநிதியமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அமைச்சர் மிலிந்த மொறகொடவின் கீழ் இருந்த அபிவிருத்தி லொத்தர் சபையை ஜனாதிபதி பொறுப்பேறக எடுத்த தீர்மானத்தை அடுத்து, ஜனாதிபதிக்கும் பிரதமருக்குமிடையே ஏற்பட்டுள்ள சர்ச்சைகள் குறித்து கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் இது குறித்து கருத்து வெளியிட்ட பந்துல, இரு தரப்புக்கும் இடையிலான கருத்து முரண்பாடுகளைத் தீர்த்து, சகவாழ்வு அரசியலை கடைப்பிடிக்க வேண்டும்.

நாட்டின் அபிவிருத்தியைப் பாதிக்கும் இந்தப் பிரச்சினைக்கு ஜனாதிபதியும் அரசாங்கமும் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகண்டு முன்மாதிரியாகச் செயற்பட வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். (தி)

## மேலதிகாரிகளின் இம்சை பொறுக்கமாட்டாது

# மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ். அலுவலகத்தில் படைவீரர் சரண்

(யாழ்ப்பாணம்)

மேலதிகாரிகளின் தொல்லை தாங்காத இராணுவச் சிப்பாய் ஒருவர் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் தஞ்சம் அடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது,

மானிப்பாய் இராணுவ முகாமில் கடமையாற்றும் சுமார் 20 வயது மதிக்கத்தக்க தென்பகுதி பெரும்பான்மை இனச் சிப்பாய் ஒருவர் நேற்று முன்தினம் நள்ளிரவு தான்

தங்கியிருந்த முகாமை விட்டு வெளியேறியுள்ளார்.

இவரைப் படையினர் தேடிவந்த நிலையில், நேற்றுக் காலை' 9.00 மணியளவில் மனித உரிமைகள் ஆணைகக்குழுவின் யாழ். அலுவலகத்

# நல்லூரான் திருவடிக்கு இன்று இரண்டாம் திருவிழா



## நல்ல கதிசேர என்றும் அருள்வேலா

அதிமோகங் கொண்டு திருவீதியெங்கும்
உருள்வோர்கள் நெஞ்சிற்-குடியேறி
அருமாயை வெல்லும் திருநாமம் சொல்லி
உருவேறி நின்று-சதுராட
கதிவாரும் பிள்ளை யவரோடு கிள்ளை
யிருவோரும் வந்து-கொடியேறி
கழல்பாடு மன்பர் புவிமீது நல்ல
கதிசேர என்றும்-அருள்வேலா
விதியாலு மூன்று கதியேது மின்றி
வெகுவாயு லைந்து-திரிவேனை
விரிவான சந்தத் தமிழான சிந்து
விரைபாதஞ் சிந்தப்-பணியாயோ?
அதிசூரர் பொன்ற அயில்வேலெ றிந்து
மயில் சேவல் கொண்ட-பெருவீரா
அழகான வணண மயில்மேல மர்ந்து

# மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ். அலுவலகத்தில் படைவீரர் சரண்

(யாழ்ப்பாணம்)

மேலதிகாரிகளின் தொல்லை தாங்காத இராணுவச் சிப்பாய் ஒருவர் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் தஞ்சம் அடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.


மேற்படி சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது,


மானிப்பாய் இராணுவ முகாமில் கடமையாற்றும் சுமார் 20 வயது மதிக்கத்தக்க தென்பகுதி பெரும்பான்மை இனச் சிப்பாய் ஒருவர் நேற்று முன்தினம் நள்ளிரவு தான் தங்கியிருந்த முகாமை விட்டு வெளியேறியுள்ளார்.

இவரைப் படையினர் தேடிவந்த நிலையில், நேற்றுக் காலை 9.00 மணியளவில் மனித உரிமைகள் ஆணைகக்குழுவின் யாழ். அலுவலகத்தில் தஞ்சமடைந்துள்ளார்.

மேலதிகாரிகளின் தொல்லை தாங்காமலேயே தான் முகாமை விட்டு வெளியேறி மனித உரிமைகள் ஆணைக்குழுவில் தஞ்சமடைந்ததாக மேற்படி சிப்பாய் தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை, இது விடயம் பலாலி படைத்தளத்திற்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து நேற்று நண்பகல் 12.00 மணியளவில் மேற்படி அலுவலகதிற்குச் சென்ற பலாலி படைத்தள உயர் அதிகாரிகளிடம் சரணடைந்த சிப்பாய் ஒப்படைக்கப்பட்டதாகத் தெரியவந்துள்ளது. (உ)





**இலங்கை கடற்படையினரால் வடபகுதிக் கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண பரு. 524 ஆம் பிரிகேட்டின் பாதுகாப்பு வலயத்துள் பிரவேசிக்கும் கடற்றொழிலாளர் சங்கப் பிரதி நிதிகள்.**

## பஸ் சேவை விஸ்தரிப்பு

(வேலணை)

பெருங்குளம் முத்துமாரி அம்மன் கோவில் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் சேவை, கோவில் வரை நடாத்தப்படவுள்ளது.

எதிர்வரும் 10, 11 ஆம் திகதிகளில் இவ்வாலய தேர், தீர்த்த உற்சவங்கள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-47)

## குளம் புனரமைப்பு

(வேலணை)

நியாப் திட்டத்தின் கீழ் வேலணைப் பெருங்குளம் திருத்தி அமைக்கப்பட்டு வருகின்றது.

கடந்தவருடம் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டபோதும், மழை காரணமாக வேலைகள் முற்றுப்பெறாமல் இருந்தும், தற்போது இதன் புனரமைப்பு வேலைகள் கிராமியக் குழுக்களின் ஊடாக நடைபெற்று வருகினறதும் குறிப்பிடத்தக்கது. (உ-47)

## சமய அறிவுப் போட்டி

(வேலணை)

வேலணைப் பெருங்குளம் முத்துமாரி அம்மன் இரதோற்சவ தினமான எதிர்வரும் 10ஆம் திகதி வேலணை இந்து வளர்ச்சிக் கழகமும், வேலணை இந்து இளைஞர் மன்றமும் இணைந்து சமய அறிவுப் போட்டியொன்றை நடாத்தவுள்ளன. (உ-47)

யிருவோரும் வந்து-கொடியேறி
கழல்பாடு மன்பர் புவிமீது நல்ல
கதிசேர என்றும்-அருள்வேலா
விதியாலு மூன்று கதியேது மின்றி
வெகுவாயு லைந்து-திரிவேனை
விரிவான சந்தத் தமிழான சிந்து
விரைபாதஞ் சிந்தப்-பணியாயோ?
அதிசூரர் பொன்ற அயில்வேலெ றிந்து
மயில் சேவல் கொண்ட-பெருவீரா
அழகான வணண மயில்மேல மர்ந்து
அருள்வாரு நல்லை-முருகோனே

நாயன்மார்க்கட்டு இராசையா குகதாசன்.

## தேசமெல்லாம் செழிக்கும்

செல்வமெல்லாம் அருளும்
சேந்தன் திருவடிகள்
நல்லூரில் உள்ளதம்மா
நம்பித் தொழுதிடுவோம்!

வெல்லற்கரிய வீர
வேலின் வடிவமம்மா
சொல்லற்கரிய வெற்றி
சூடும் மகிமையம்மா!

உள்ளமெல்லாம் உயரும்
உணர்வில் அமைதிவரும்
கள்ளப் பகையனைத்தும்
காணாமலே ஓடும்!

வள்ளிக் கணவன் புகழ்
வானலையெல்லாம் உயிர்க்கும்!
தெள்ளத் தெளிந்த நலம்
தேசமெல்லாம் செழிக்கும்!

நிவேதிதா.

## நல்லை நாதனே சரணம்!

வல்ல வேலினைக் கையினில் தாங்கி
வள்ளி தெய்வ யானையர் சூழ
புள்ளி மஞ்ஞை மீதினில் தோன்றும்
வள்ளல் சண்முக நாதனே! சரணம்!!

அல்லல் ஒழிந்து அமைதி நிலைபெற
உள்ளம் நிறைவே அடைந்திட இங்கே
நல்ல தீர்வது தந்திடு! நற்பதி
நல்லை உறையும் நாதனே! சரணம்!!

நாயன்மார்க்கட்டு ப.மகேந்திரதாசன .

## இன்று ஒரு தகவல்

# ஆளில்லா விமானம்

ஒரு கல்யாண வீட்டில் விருந்து நடந்து கொண்டிருக்கின்றது. எல்லோரும் குனிந்த தலை நிமிராமல் மும்முரமாக சாப்பிட்டுக் கொண்டிருக்கின்றனர். ''சாரை நன்றாகக் கவனி'' என்று கூறுகின்றார் ஒருவர். சாதாரணமாக இப்படிக் கூறினால் என்ன அர்த்தம்? காய்கறிகளைச் சரியாக வைத்து ஒழுங்காய்ப் பரிமாறு என்று அர்த்தம்! ஆனால் இவர் கூறியதற்கு வேறு அர்த்தம்! ''ஏன் சார் அவரை மட்டும் சிறப்பாகக் கவனி என்று கூறினீர்கள்?'' என்று கேட்டார் ஒருவர். அதற்கு இவர் ''அந்த ஆளை சரியாகக் கவனிக்கவில்லை என்றால் நாம் ஏமாந்து விடுவோம். ஏனென்றால் அவர் எந்தக் கல்யாணத்துக்குப் போனாலும் திரும்பி வரும்போது ஏதாவது ஒரு பொருளை கடத்திக் கொண்டு போய் விடுவார். அது தான் அவரை அப்படிக் கவனிக்கச் சொன்னேன்'' என்றார்.

ஆக, கடத்தல் என்பது இந்த உலகத்தில் எத்தனையோ விதமாக நடந்து கொண்டு தான் இருக்கின்றது. இப்போது மிகவும் முக்கியமாகப் பேசப்படும் கடத்தல் போதை மருந்துக்கடத்தல். அதைத் தடுப்பதற்கு எத்தனையோ முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. இருந்தாலும் இது எல்லோரது கண்ணிலும் மண்ணைத்தூவி விட்டு நடந்து கொண்டிருக்கிறது. உலகையே மிகவும் பயமுறுத்திக் கொண்டிருக்கும் விஷயம் இது. இந்தக் கடத்தலைக் கண்டு பிடிப்பதற்கு இப்போது அதற்கென ஓர் விமானத்தையே பயன்படுத்துகின்றனர். அதுவும் எப்படி? ''ஆளில்லாத விமானம''

இந்த ஆளில்லாத விமானத்திற்கு ''காண்டோர்'' (Condor) என்று பெயர். தானாக உயரத்தில் கிளம்பும், தானாகவே தரையிறங்கும். அது மட்டுமல்ல, கண்ணுக்கு எட்டாத அளவு உயரத்தில் இது பறக்குமாம். அதாவது சுமார் 20 கிலோ மீற்றர் உயரத்தில் பறக்கும். 65 ஆயிரம் அடி இது தரையில் இறங்காமல் தொடர்ந்தும் பல நாட்கள் சுற்றிக் கொண்டிருக்கும்.

கணனி எவ்வாறு உத்தரவு போடுகின்றதோ அதே போன்று இவ் விமானம் பறந்து கொண்டிருக்கும். கீழே கட்டுப்பாட்டு அறையிலிருந்து ஒரு உத்தரவு போட்டு அதை வேறு இடத்திற்கும் அனுப்பி வைக்கலாம். எந்த இடத்தைக் குறிப்பிடுகின்றோமோ அதன்படி பறக்கும். இது ஒரு கண்காணிப்பு விமானம். இதில் ரேடர் சாதனம் உள்ளது.

# மீன் வழங்காத மீனவர் மீது கடற்படை பழிவாங்கல்?

## வ.கி.க.தொ.சமாசத்தில் மீனவர் புகார்

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்கு மணற் காட்டுப்பகுதியில் படையினரின் கட்டுப்பாட்டை மீறிக் கடற் தொழிலில் ஈடுபட்டதாகக் கூறி இரண்டு கரை வலை உரிமையாளர்களை கடற்தொழிலில் ஈடுபட கடற் படையினர் தடை விதித்துள்ளனர்.

இதனால் இத்தொழிலை நம்பி வாழ்ந்த அறுபதுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிப்படைந்துள்ளன.

கடற்படையின் கட்டுப்பாட்டை மீறி கடற்தொழிலில் ஈடுபட்டதாலேயே இவர்கள் மீது தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாக கடற்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளபோதிலும், கடற் படையினரின் உணவுத் தேவைகளுக்குத் தினமும் மீன் வழங்க வேண்டும் எனவும், இந்த உத்தரவை மீறியதாலேயே இவர்கள் மீது தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர்களின் சமாசத்திற்கு பிரஸ்தாப மீனவர்கள் கடிதம் மூலம் முறையிட்டுள்ளனர்.

இதேவேளை, வடமராட்சி மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக நேற்றுக் காலை10 மணிக்கு, 524 , படையணித் தலைமையகத்தில், இலங்கைப்போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு உறுப்பினர்களுக்கும், படை உயர் அதிகாரிகளுக்கும், மீனவர் சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையே முத்தரப்பு சந்திப்பு இடம்பெறவிருந்தது. (பி-3,43)

# இடைக்கால நிர்வாக சபை குறித்து தென்பகுதி மக்கள் அஞ்சத் தேவையில்லை

## லங்கா சமசமாஜக் கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் அமைக்கப்படவுள்ள இடைக்கால நிர்வாக சபை தொடர்பாக தென் பகுதி மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை என லங்கா சமசமாஜக்கட்சியின் அரசியல் சபை உறுப்பினர் லால் விஜயநாயக்க தெரிவித்துள்ளார்.

வானொலி நிலையமொன்றுக்கு அளித்த விசேட பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட விஜயநாயக்க,

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் தற்போது முன்னெடுத்துச் செல்லப்படும் இடைக்கால நிர்வாக சபைத் திட்டவரைபு புதியதொன்றல்ல.

இவ் யோசனை 1987ஆம் ஆண்டிலிருந்து மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களினால் முன்வைக்கப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்குப் பகுதிகளின் நிர்வாகச் செயற்பாடுகளை தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு வழங்குவதற்கு இத்திட்டம் உதவுகிறது.

இடைக்கால நிர்வாக சபை அமைப்பு ஏற்படுத்தப்படவேண்டுமானால், அதற்கு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கும், பாராளுமன்ற அதிகாரம் கொண்ட பிரதமருக்கும் இடையே இணக்கப்பாடு காணப்படுவது அவசியம எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (தி)

## இராசி பலன்

**04.08. 2003**

**(ஆடி 19, திங்கள்)**

சப்தமி - பி.இ. 2.27 வரை
சித்திரை - மாலை 5.47 வரை
இராகுகாலம் - 7.34 - 09.04
சுபநேரம் - 12.04-01.34

## கொழும்பிலிருந்து வடக்கு நோக்கி

# மடுமாதா சிலையுடன் அமைதிப் பயணம்

இறங்காமல் தொடர்ந்தும் பல நாட்கள் சுற்றிக் கொண்டிருக்கும்.

கணனி எவ்வாறு உத்தரவு போடுகின்றதோ அதே போன்று இவ் விமானம் பறந்து கொண்டிருக்கும். கீழே கட்டுப்பாட்டு அறையிலிருந்து ஒரு உத்தரவு போட்டு அதை வேறு இடத்திற்கும் அனுப்பி வைக்கலாம். எந்த இடத்தைக் குறிப்பிடுகின்றோமோ அதன்படி பறக்கும். இது ஒரு கண்காணிப்பு விமானம். இதில் ரேடர் சாதனம் உள்ளது. இரு பக்கமும் புகைப்படக்கருவி பொருத்தப்பட்டிருக்கும். அதன் மூலம் படம் எடுத்துப் பூமியிலுள்ள கட்டுப்பாட்டு நிலையத்திற்கு அனுப்பி வைத்துக் கொண்டிருக்கும்.

கடலில் ஒரு குறிப்பிட்ட பகுதியில் கள்ளக்கடத்தல் கப்பல் சென்று கொண்டிருக்குமாயின் அது கரையிலுள்ள எந்த இடத்தை நோக்கிச் செல்கின்றது என்பதைத் தரைக்கட்டுப்பாட்டு நிலையத்திலிருந்து கண்காணிக்க முடியும். கள்ளக்கடத்தல் செய்யும் படகில் உள்ளவர்களுக்கு இவ் விமானம் பறப்பது கண்ணுக்குத்தெரியாது.

இது பிஸ்டன்களால் இயங்கும் ஒரு விமானம். இதை பரிசோதனைக்காக முதலில் பறக்க விட்ட போதே 66 ஆயிரத்து 980 அடி உயரத்தில் பறந்து சாதனை நிகழ்த்தியதாம். பிஸ்டன் எஞ்சின் விமானம் இவ்வளவு உயரத்தில் பறப்பது உலக சாதனையாம். இதன் இறக்கைகள் ஒரு முனையிலிருந்து மறு முனைவரை 200 அடி இருக்குமாம். போதை மருந்து கடத்தலைத் தடுப்பதற்கு அமெரிக்காதான் முதலில் இந்த விமானத்தைப் பயன்படுத்தப் போகின்றதாம்.

அது இருக்கட்டும்! வருங்காலத்தில் இப்படி நடந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. எப்படித் தெரியுமா? சர்வதேச கடத்தல் கண்காணிப்பு நிலையம் ஒன்று உள்ளது. அங்கே ஒருவர் கடத்தல் புகார் கொடுக்கின்றார். ''சார் இந்து மகா சமுத்திரத்தில் இந்த இடத்திலே ஒரு கடத்தல் படகு போய்க் கொண்டிருப்பதாகத் தகவல் கிடைத்திருக்கின்றது'' என்கிறார். ''சரி நமது கடத்தல் கண்காணிப்பு விமானத்தை அந்தப் பிரதேசத்திற்கு அனுப்பிவை'' என்று கண்காணிப்பு நிலையத்தினர் உத்தரவு போடுகின்றனர். விமானம் புறப்பட்டுச் செல்கின்றது. இரண்டு தினங்கள் கழித்து மறுபடியும் ஒரு கடத்தல் புகார் வருகின்றது. வந்தவர் ''சார் இந்து மகா சமுத்திரத்திலே...'' என்று ஆரம்பிக்கின்றார். அதற்கு இவர்கள் உடனே, ''அது தான் முதலிலேயே தெரியுமே!'' என்கின்றனர். அது வேறு, இது வேறு சார்! முதலில் கடத்தியது ''போதைப்பொருள்'' இப்போது கடத்தப்பட்டது வேறு என்கிறார் வந்தவர். அவர்கள் இப்போது கடத்தப்பட்டது என்ன? என்கின்றனர். அதற்கு இவர் இப்போது கடத்தப்பட்டது நாம் அனுப்பிய கண்காணிப்பு விமானம் என்கிறார்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

## [illegible]

**04.08. 2003**

**(ஆடி 19, திங்கள்)**

சப்தமி - பி.இ. 2.27 வரை
சித்திரை - மாலை 5.47 வரை
இராகுகாலம் - 7.34 - 09.04
சுபநேரம் - 12.04-01.34

சித்தாமிர்தம்

**மேடம்**
தேகநலன், நல்ல வரவேற்பு, தெய்வ சிந்தை, தொழில் நன்மை.

**இடபம்**
உறவினர் உதவி, தடைப்பட்ட காரியம கைகூடும், விருந்துபசாரம், மனமகிழ்ச்சி.

**மிதுனம்**
வியாபாரநன்மை, உடல் நலக் குறைவு, காரியதாமதம், குடும்பக் கவலை.

**கடகம்**
கோபப்படுதல், உடற்சோர்வு, முயற்சி தாமதம், போசனநன்மை.

**சிங்கம்**
சகோதரர் உதவி, பிரயாண நன்மை, தன இலாபம், தொழில்சிறப்பு.

**கன்னி**
தனவிரயம், பெரியோர் சந்திப்பு, வீண் வார்த்தை, காரியதாமதம்.

**துலாம்**
தெய்வசிந்தை, தேக சௌக்கியம், நல்ல முயற்சி, எதிர்பாராத நன்மை.

**விருச்சிகம்**
காரியஅலைச்சல், மனப்பதற்றம், வேலைக்கஷ்டம், உறவினர் மனஸ்தாபம்.

**தனுசு**
காரியசித்தி, மன மகிழ்ச்சி பிறருக்கு உதவுதல், தொழில் நன்மை.

**மகரம்**
நல்லசெய்தி, அதிக பிரயாசை நிலைமாற்றம், செய்தொழில் நன்மை.

**கும்பம்**
மனச்சஞ்சலம், ரோக நிலை, தொழில் நன்மை, இடமாற்றம்.

**மீனம்**
பிரயாணபயம், பணத்தட்டுப்பாடு, காரிய தடங்கல், உடல் நலக்குறைவு.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

**கொழும்பிலிருந்து வடக்கு நோக்கி**

# மடுமாதா சிலையுடன் அமைதிப் பயணம்

(யாழ்ப்பாணம்)

மடுமாதாவின் திருவுருவச் சிலையொன்றை கொழும்பிலிருந்து வடக்கிற்கு பவனியாகக் கொண்டு வர சமூக -சமய நடு நிலையம் ஏற்பாடுகள் செய்து வருகின்றது.

பாப்பரசர் 2வது அருளப்பர் சின்னப்பரால் ஆசிர்வதிக்கப்பட்ட இச் சிலை, கொழும்பு 10 பாத்திமா ஆலயததிலிருந்து எதிர் வரும் 8ஆம்திகதி ''சதாஹம் சாரிக் காவ''(அமைதி நல்லிணக்கப்பயணம்) என்ற தலைப்பில் பவனியாக பிரமாணாளன் குளத்துக்கு கொண்டு வரப்படும். அங்கு விசேஷமாக அமைக்கப்பட்டுள்ள மேடையில் நிறுவப்படும்.

மடுமாதாவின் சிலையொன்று முன்னர் வடக்கிலிருந்து தெற்கிறகு எடுத்துச் செல்லப்பட்டிருந்தது. இப்பொழுது அச்சிலையின் மாதிரி வடிவம் வடக்கிற்கு எடுத்துச் செல்லப்படுவதனால இப்பொழுது முன்னெடுக்கப்பட்டு வரும் அமைதி முயற்சி மேலும் வலுவடையுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. (பி)

# எல்லைகளற்ற பத்திரிகையாளர் பிரதமர் ரணிலுக்கு கடிதம்

(கொழும்பு)

சண்டேலீடர் பத்திரிகை ஆசிரியருக்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டமை தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு ''எல்லைகளற்ற பத்திரிகையாளர் அமைப்பு'' பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளது.

கடற்தொழில் நீரியல் வள அமைச்சர் மகிந்த விஜயசேகர பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுக்களில் சம்பந்தப்பட்டிருப்பதாக அண்மையில் சண்டேலீடர் பத்திரிகையில் செய்தி வெளியானது.

இதனைத்தொடர்ந்து மேற்படி பத்திரிகை ஆசிரியருக்கு அமைச்சரின் சகாக்கள் கொலை மிரட்டல் விடுத்திருந்தனர்.

இது தொடர்பாக பிரதமர் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கோரியே இக்கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (பி)

**இலங்கை வழியாக**

# வெளிநாடு செல்ல முயன்றவர்கள் கைது!

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் இலங்கை வழியாக வெளிநாடுகளுக்குச் செல்ல முற்பட்ட அறுநூறுக்கும் அதிகமான வெளிநாட்டவர்களை பொலிஸார் கடந்த வாரம் கைது செய்து காவலில் வைத்துள்ளனர்.

இவ்வாறு கொழும்பு,கண்டி,காலி ஆகிய இடங்களில் கைது செய்யப்பட்ட இவர்கள், இந்தியா, பாகிஸ்தான்,நேபாளம் ஆகிய நாடுகளைச சேர்ந்தவர்களாவர்.

கைது செய்யப்பட்ட அறுநூறுக்கும் மேற்பட்ட வெளிநாட்டவர்களையும் ஒரே சிறைச்சாலையில் காவலில் வைப்பது சிரமமாக இருப்பதால் வெவ்வேறு சிறைகளில இவர்களைக் காவலில் வைத்திருப்பது தொடர்பாக சிறைச்சாலை வட்டாரங்கள் ஆராய்ந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (வ)

## நெடுந்தீவில் ஆரம்பிக்கப்பட்ட

# தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவைக்கு இன்று அகவை ஒன்று

(யாழ்ப்பாணம்)

தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவை நெடுந்தீவில் ஆரம்பிக்கப்பட்டு இன்றுடன் ஓராண்டு பூர்த்தியாகிறது.இச் சேவையைப் பாராட்டி நெடுந்தீவு தேசிய எழுச்சிப்பேரவை விடுத்துள்ள செய்தி.

அரசும் விடுதலைப் புலிகளும் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் 18.06.2002 எம் தீவகத்திற்கு அரசியல் பணிகளுக்காக காலடி வைத்த வீரமறவர்களான விடுதலைப்புலிகளை மக்கள் ஆயிரக்கணக்கில் திரண்டெழுந்து வரவேற்றனர்.

விடுதலைப்புலிகளின் வருகையின் பின் எம் தீவகம் விடுதலை பெற்று, எம் மக்கள் சுதந்திரக் காற்றை சுவாசிககத் தொடங்கினர். இங்கு வந்த விடுதலைப்புலிகள் மக்களின் குறைகளைக் கேட்டறிந்து அதற்குப் பரிகாரம் தேடித்தந்தார்கள்.

எம் தீவகத்தில் உள்ள மாவட்ட வைத்தியசாலையானது ஒரு வைத்திய அதிகாரியும்,ஒரு உதவி வைத்திய அதிகாரியும் கடமையாற்ற வேண்டிய வைத்தியசாலையாகும். தற்பொழுது ஓய்வு பெற்ற வைத்திய அதிகாரி ஒருவரே கடமையாற்றி வருகின்றார். இவ் வைத்தியசாலையில் போதிய அளவு மருந்துப்பொருட்களும், மருத்துவ பரிசோதனை வசதிகளும் இல்லாமையினால் தீவகமக்கள் பெரும் இன்னல்களை எதிர் நோக்கிக் கொண்டிருந்த வேளையில், மக்களுக்கு மருத்துவ சேவை அளிக்க தீர்மானித்த விடுதலைப் புலிகள் 04.08.2002 அன்று எம் தீவில் தியாக தீபம் திலீபன் மருத்துவ மனையைத் திறந்து மருத்துவ சேவையை ஆரம்பித்தனர்.

அன்றிலிருந்து இரவு பகலாக எம் தீவக மக்களுக்கு மகத்தான சேவையை ஆற்றிவருவதுடன், இதுவரை காலமும் 12 ஆயிரத்து 627க்கு அதிகமான நோயாளருக்கு சிகிச்சை அளித்துள்ளதுடன், 100ற்கும் அதிகமான கண் பார்வையற்றவர்களை பரிசோதித்து இலவச மூக்குக் கண்ணாடி வழங்கியதுடன், 50ற்கு மேற்பட்டோருக்கு பற்சிகிச்சையும் அளிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

மருத்துசேவையை ஆரம்பித்த காலத்திலிருந்து இரவு பகல் பாராது மக்களுக்கு சேவையாற்றிய, ஆற்றிக் கொண்டிருக்கின்ற மருத்துவப் போராளி பூவேந்தனையும் ஏனைய மருத்துவப் போராளிகளையும், மருத்துவ சேவை ஊழியர்களையும் மனதார நன்றிப் பெருக்குடன் பாராட்டுகின்றோம்.

ஓராண்டை நிறைவு செய்யும் இன்நாளிலும் துறை சார்ந்த மருத்துவ நிபுணர்களையும் அழைத்து சேவையாற்றுவது குறிப்பிடத்தக்கது. இன்றைய நிறைவு நாளை தீவக மக்கள் எழுச்சி பூர்வமாகக் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள்.

இவ் மருத்துவ சேவையினை தீவகத்தில் நடாத்துவதற்கு சகல விதமான உதவிகளையும் வழங்கிக் கொண்டிருக்கும் தமிழீழ விடுதலைப புலிகளுக்கும்,குறிப்பாக எமது தீவின மருத்துவக் குறைபாட்டை அறிந்து கொண்டு உடனடியாக வீரம் விளையும் விளைநிலமான வன்னியில் இருந்து எம் தீவகத்திற்கு மருத்துவக் குழுவினரை அனுப்பி தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையை ஆரம்பித்த எமது தேசியத்தலைவர் மேதகு. வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கும் நெடுந்தீவு மக்கள் சார்பில் நன்றியையும்,மனமார்ந்த பாராட்டுக்களையும் தெரிவிக்கின்றோம். (உ)

## கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் எதிர்வரும் 6,7ஆம் திகதிகளில்கட்டக்காலி நாயகள் ஒழிப்பு நடவடிக்கை மேற் கொள்ளப்படவுள்ளது.

இதன் பிரகாரம் 6ஆம்திகதி புதன் கிழமை வட்டு.யாழ்ப்பாணக்கல்லூரியிலும் அதன் சுற்றாடல் பகுதிகளிலும், மறுநாள் வியாழக்கிழமை சங்கரத்தை சந்தைப் பகுதியிலும் அதன்

## சதாம் குப்பையா....?!~ கவனம் பவல்




# கட்டின்றித் தொடரும் கல்,மண் அகழ்வால் பயிர்செய் நிலம் நீரில் மூழ்கும் அபாயம்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலியின் கிழக்குப் புறமாகவுள்ள கடலை அண்டிய பகுதிகளான மந்தோனை, நாச்சிமார் கோவிலடி,கொன்னதுவு, இறதாவில் ஆகிய பகுதிகளில் கட்டின்றித் தொடரும் கல்,மண் அகழ்வால் இப்பகுதி நீரில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, இப்பகுதிகளில் மாரிகால விவசாயச் செய்கையை மேற்கொண்டு வந்த பெருமளவு விவசாயிகளும் மண்,கல், அகழப்பட்ட குழிகளில் நீர் தேங்கி நிற்கின்ற காரணத்தினால் தமது வழமையான பயிர்ச்செய்கையை மேற்கொள்ள முடியாத அவலத்தை எதிர் கொண்டுள்ளனர்.

தவிரவும்,இப்பாரிய கிடங்குகள் மாரி காலத்தில் மக்களின் நடமாட்டத்திற்கும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளதாகவும்,அண்மையில் பெய்த மழை காரணமாக இக்குழிகளுக்குள் தேங்கி நிற்கும் வெள்ளத்தினுள் தவறி விழுந்த சிலர் வைத்திய சிகிச்சைக்குட்பட்டு வருவதாகவும தெரிய வருகிறது.

இந்நிலைமை குறித்து இப்பகுதி கிராம அலுவலருடாக சம்பந்தப்பட்டவர்களிடமும் பொலிஸாரிடமும் முறையிட்டும் கூட எதுவித பலனும ஏற்படவில்லையென கவலை வெளியிட்டுள்ள பாதிக்கப்பட்ட விவசாயிகள், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் இது விடயத்தில் தலையிட்டு தமக்கோர் தீர்வைப் பெற்றுத் தர வேண்டும் என எதிர்பார்ப்பு வெளியிட்டுள்ளனர். (உ)

# ஆயுதங்களைக் கீழே போடுமாறு புலிகளைக் கோருவது முட்டாள் தனமானது

விடுதலைப் புலிகள் 04.08.2002 அன்று

## கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் எதிர்வரும் 6,7ஆம் திகதிகளில்கட்டக்காலி நாயகள் ஒழிப்பு நடவடிக்கை மேற் கொள்ளப்படவுள்ளது.

இதன் பிரகாரம் 6ஆம்திகதி புதன் கிழமை வட்டு.யாழ்ப்பாணக்கல்லூரியிலும் அதன் சுற்றாடல் பகுதிகளிலும், மறுநாள் வியாழக்கிழமை சங்கரத்தை சந்தைப் பகுதியிலும் அதன் சுற்றாடல் பகுதிகளிலும் இந் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

மேற்படி நடவடிக்கைக்கு பொது மக்கள் பூரண ஒத்துழைப்பினை வழங்கவேண்டும் எனவும் வட்டுக்கோட்டை பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ச.பரமேஸ்வரன் அறிவித்துள்ளார். (உ-252)

## "மனமுருகி வயல் வெளியில்" நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக்கழகம் நடாத்தும் கவிஞர் சுஜேனின் (சுவிஸ்) "மனமுருகி வயல் வெளியில்"கவிதைத்தொகுதி வெளியீட்டு விழா இன்று திங்கட்கிழமை பி.ப.4 மணிக்கு வல்வெட்டித்துறை சிதம்பராக்கல்லூரியில் அதிபர் ந.அரியரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் ,சிறப்புரையை யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதியும், வெளியீட்டுரையை புதுவை இரத்தின துரையும்,மதிப்பீட்டுரைகளை செம்பியன் செல்வன் மற்றும் கலாநிதி சி.சிவலிங்கராசா ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர். (உ-8)

## நெல் கொள்வனவுக்கு 50 கோடி நிதி

(கொழும்பு)

சிறுபோக நெல் கொள்வனவுக்கென திறைசேரி 50 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இந்நிதி மகாவலி அதிகார சபை, கூட்டுறவுச்சங்கங்கள் ஏனைய அரச துறை நிறுவனங்களின் நெல்கொள்வனவுக்காக பயன்படுத்தப்படவுள்ளது.

சிறுபோக அறுவடைக்காலத்தில் 12 இலட்சம் மெற்றிக்தொன நெல்லை கொள்வனவு செய்ய அரசு திட்டமிட்டுள்ளது. (தி)

---

இருந்து எம் தீவகத்திற்கு மருத்துவக் குழுவினரை அனுப்பி தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையை ஆரம்பித்த எமது தேசியத்தலைவர் மேதகு. வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கும் நெடுந்தீவு மக்கள் சார்பில் நன்றியையும்,மனமார்ந்த பாராட்டுக்களையும் தெரிவிக்கின்றோம். (உ)

நீரில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, இப்பகுதிகளில் மாரிகால விவசாயச் செய்கையை மேற்கொண்டு வந்த பெருமளவு விவசாயிகளும் மண்,கல், அகழப்பட்ட

த்திற்கும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளதாகவும்,அண்மையில் பெய்த மழை காரணமாக இக்குழிகளுக்குள் தேங்கி நிற்கும் வெள்ளத்தினுள் தவறி விழுந்த சிலர் வைத்திய சிகிச்சைக்குட்பட்டு வருவதாக

யிகள். தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் இது விடயத்தில் தலையிட்டு தமக்கோர் தீர்வைப் பெற்றுத் தர வேண்டும் என எதிர்பார்ப்பு வெளியிட்டுள்ளனர். (உ)

# ஆயுதங்களைக் கீழே போடுமாறு புலிகளைக் கோருவது முட்டாள் தனமானது

## ரவிராஜ் எம்.பி. தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக்கூட்டணிக்குள் சிறு சிறு கருத்து மோதல்கள், முரண்பாடுகள் இடைக்கிடை ஏற்படுகின்ற போதிலும் அது எமது கட்சி உறுப்பினர்களாலேயே சீர் செய்யப்படுகிறது.

இதை எவரும் பெரிதுபடுத்தத் தேவையில்லை என்று யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் தமிழர் விடுதலைக்கூட்டணியின் யாழ். ஸ்ரான்லி வீதி அலுவலகத்தில் இடம்பெற்ற சமகால அரசியல் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையிலேயே ரவிராஜ் இவ்வாறு குறிப்பிட்டார்.

கூட்டணியின் மூத்த உறுப்பினர்களான எஸ். சின்னத்துரை, கே.முத்துலிங்கம் ஆகியோர் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் அவர் தொடர்ந்தும் கருத்துக்கூறுகையில்,

இடைக்கால நிர்வாக சபையை எம்மிடம் தருவதாக ஜனாதிபதி சந்திரிகா முன்னர் தெரிவித்திருந்தா. இருப்பினும் வேறு சில கட்சிகளின் நடவடிக்கைகள் காரணமாக இம் முயற்சி பின்னர் கைவிடப்பட்டது.

எமது மக்கள் நிம்மதியோடும் சுதந்திரத்தோடும் வாழ்வதைத்தான் நாம விரும்புகின்றோம். இதற்காகவே உழைத்து வருகின்றோம்.

போராட்டத்தைத் தொடக்கியவர்களாகிய நாங்களே அதனை முடிவுக்குக் கொண்டு வரவும் ஆசைப்படுகின்றோம்.



நிரந்தர அமைதி கிடைத்த பிறகே புலிகளிடமுள்ள ஆயுதங்கள் களையப்பட வேண்டும். அதற்கு முன்னர் புலிகளை ஆயுதத்தைக் கீழே போடுமாறு கோருவது புத்திசாதுரியமன்று.

நாங்கள் விடுதலைப்புலிகளின்பால், அவர்களின் போராட்டத்தின்பால் நெருக்கமும் விசுவாசமும் மிக்கவர்களாகவே என்றைக்கும் இருந்துள்ளோம்.

தமிழ் மக்களின் உரிமைகள் தொடர்பில் செயற்படுவதாயின் ஈ.பி.டி.பி.யினர் எம்முடன் இணைந்து செயற்பட வேண்டும்.

தனித்து இயங்குவதால் எந்தப் பயனும் ஏற்படப்போவதில்லை.

இடைக்கால நிர்வாக சபை தொடர்பான கோரிக்கையை நாங்கள் நீண்டகாலமாகவே முன் வைத்து வருகின்றோம்.

ஈழப்போரில் தம் உயிரை ஈய்ந்த 17ஆயிரம் மாவீரர்களுக்கும் நாம் தலை வணங்குகின்றோம்.

இடைக்கால நிர்வாகம் விடுதலைப்புலிகள் வசமாவதே பொருத்தமானது. நாம் அதற்கு வேண்டிய ஆலோசனை, ஒத்துழைப்புக்களை வழங்குவோம். இருப்பினும் எம்மையும் இடைக்கால நிர்வாகத்தில் பங்குகொள்ளுமாறு விடுதலைப் புலிகள் கேட்டுள்ளனர் என்று குறிப்பிட்டார். (உ-7,43)

# ஜப்பானிய பிரதி அமைச்சர் ஜனா நேற்று யாழ்ப்பாணம் விஜயம்

(யாழ்ப்பாணம்)

மூன்று நாள் விஜயம் மேற்கொண்டு நேற்று இலங்கை வந்த ஜப்பான் பிரதி வெளி விவகார அமைச்சர் ரெற்சுரோஜனூ (Tetsuroyano) உடனடியாகவே வடபகுதி விரைந்தார்.

மு.ப.10 மணியளவில் இலங்கையின் உதவி வெளிவிவகார அமைச்சர் லால் தர்மப்பிரிய கமகே, யுனிசெவ் இலங்கைப் பிரதிநிதி ஹொட் சைடன், ஜப்பானியத் தூதுவர் ஜெய்சிரோ ஒட்சுகா சகிதம் பலாலி விமானத் தளத்தில் வந்திறங்கிய இவர்,பலாலி படைத்தளத்தில் வைத்து இராணுவத்தின் உயர் தளபதிகளைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

யாழ்.மாவட்டத்தின் புதிய இராணுவக் கட்டளைத் தளபதி தர்மிகுலதுங்க, உதவிக் கட்டளைத் தளபது மேஜர் ஜெனரல் இரத்தினசபாபதி ஆகியோர் கடந்த கால யுத்தம் காரணமாக புதைக்கப்பட்ட நிலக்கண்ணி வெடிகளில் பெருமளவை இராணுவத்தின் கண்ணிவெடியகற்றும் பிரிவினரே அகற்றி இருப்பதாகவும், முழுமையாக கண்ணிவெடிகளை அகற்ற நான்காண்டுகள் பிடிக்கும் எனவும் இச்சந்திப்பில் சுட்டிக்காட்டினர்.

இதன் காரணமாக நவன கண்ணி வெடிகளை அகற்றும் உபகரணங்களுக்கான அவசர தேவைப்பாடு ஏற்பட்டிருப்பதையும் எடுத்து விளக்கினர்.

இதற்குப்பதிலளித்த ஜப்பானிய பிரதி வெளி விவகார அமைச்சர்,

சமாதானத்தையும் அமைதியையும் நிலை நாட்ட நிலக்கண்ணி வெடிகளை அகற்றுவது அவசியம். இதற்காக நவீன உபகரணங்களை வழங்கும் நடவடிக்கைகளை ஜப்பான் மேற்கொள்ளும் என்றார்.

இச்சந்திப்பை முடித்துக்கொண்டு இணுவிலுக்குப் புறப்பட்ட இவர், அங்குள்ள நலன்புரி நிலையத்திற்குச் சென்று அங்கு வசிக்கும் மக்களுடன் கலந்துரையாடினார்.

அதன்போது,நிரந்தர சமாதானம் ஏற்படும் பட்சத்தில் அகதி வாழ்வுக்கு முற்றுப்புள்ளி வைக்க உறுதியான நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

தொடர்ந்து கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயத்தில் ஜப்பான் அனுசரணையுடன் இடம் பெற்று வரும் இலவச மருத்துவ முகாமைப் பார்வையிட்டதுடன்,அங்கு பொதுமக்களுடன் கலந்துரையாடிய பின்னர் கூடியிருந்த ஏராளமான பொதுமக்கள் முன்னிலையில் விசேட உரை ஒன்றையும் ஆற்றினார்.

பின்னர் பி.ப.3 மணியளவில் தனது பயணத்தை முடித்துக் கொண்டு கொழும்பு புறப்பட்டார்.

இதேவேளை,யாழ்குடாநாட்டில் உள்ள உயர்பாதுகாப்பு வலயங்களையும் இவர் பார்வையிட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (த-51)

கருமஞ் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு
உரிமை உடைத்திவ் வுலகு
—குறள்

வலம்புரி

## யப்பானின் வருகை

உலக யுத்தத்தில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட நாடு யப்பான். அமெரிக்காவின் அணுக்குண்டு வீச்சின் கொடூரத்தைத் தாங்கிக் கொண்டு பிணக்குவியலின் மேடுகளில் இருந்து தன்னை உயர்த்திக் கொண்ட நாடு என்ற பெருமையும் யப்பானையே சாரும். தொழில் நுட்ப வளர்ச்சியில் யப்பானுக்கு நிகர் யப்பானே என்னும் அளவிற்கு அங்கு கைத்தொழில் நிறுவனங்களும், உற்பத்தி நிறுவனங்களும் பெரு வளர்ச்சி கண்டுள்ளன.

'நேர முகாமைத்துவம்' யப்பானில் மிகச் சிறப்பாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது. அதற்காக அந் நாட்டின் தேசிய கீதமே நான்கு வரிகளில் மட்டும் அமைக்கப்பட்டுள்ளது எனில் நேரப் பயன்பாடு அங்கு எத்தகையதென்பதை உணர முடியும்.

உலக யுத்தத்தால் பாதிக்கப்பட்ட யப்பான் இலங்கை இனப்பரச்சினையிலும் அக்கறை காட்டுவது மகிழ்வுக்குரியது. ஆனால யப்பானின் இவ் அக்கறை எந்நோக்கம் கொண்டது என்பதே இங்கு ஆராய்வுக்குரியதாகும்.

இலங்கையில் தமிழ் மக்களின் உரிமை மறுக்கப்பட்டுள்ளது. அவர்களில் உரிமைப் பிரச்சினை தீர்த்து வைக்கப்பட வேண்டியதொன்று என்ற அடிப்படையில் யப்பான் அக்கறை காட்டுகிறதா? அல்லது யப்பானின் உற்பத்திப் பொருட்களுக்கு இலங்கை நல்லதொரு சந்தை என்பதால் அங்கு யுத்தம் நடைபெறுவது யப்பானுக்கும் நட்டத்தைத் தரும் என்ற நோக்கிலா என்பதை காலத்தின் அசைவுகளே தீர்மானிக்க வேண்டும்.

எதுவாயினும் யப்பான் பிரது

## கட்டட நிர்மாணத்தில் முறைகேடு

(கொழும்பு)

மேல்மாகாணசபை பாடசாலை கட்டட நிர்மாணப்பணிகளில் பல்வேறு முறைகேடுகள் இடம்பெற்றுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கல்விஅமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ், கட்டடங்களை அமைப்பதற்கான கேள்விப்பத்திரங்களை கோரும் நடவடிக்கைகளிலேயே இம்முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாக கல்வி அமைச்சர் கருணா சேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

இம்முறைகேடுகள் கண்டுபிடிக்கப் பட்டதை அடுத்து, கட்டடங்களை அமைப்பதற்கான கேள்விப்பத்திரங்களை கோரும் தீர்மானங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. (தி)

## கிணறுகள் புனரமைப்பு

(கல்வயல்)

தென்மராட்சிப் பிரதேசசெயலர் பிரிவுகுட்பட்ட அனைத்து கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் உள்ள நன்னீர் பொதுக் கிணறுகளைப் புனரமைக்கும் நடவடிக்கைகளைப் பட்டினிக்கெதிரான நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது. (உ-36)

## தேசிய கல்வியியல் கல்லூரிகளில்
# ஆசிரியர் கல்வியியல் தொழிற்பயிற்சி
# நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

(கொழும்பு)

தேசிய கல்வியியல் கல்லூரிகளில் ஆசிரியர் கல்வியியல் தொழிற பயிற்சி நெறிகளைப் பயில்வதற்கு 2004 ஆம் கல்வியாண்டுக்கான அனுமதிகளுக்கு மனிதவள அபிவிருத்தி கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதுதொடர்பான அறிவித்தல் 01.08.2003 வெளியிடப்பட்ட 1300 ஆம் இலக்க வர்த்தமானி மூலம் விடுவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான விண்ணப்பங்களை 2003 செப்ரெம்பர் 2ஆம் திகதிக்கு முன்னர், பரீட்சை ஆணையாளர் நாயகம பாடசாலைப் பரீட்சை ஒழுங்கமைப்புப் பகுதி, தேசிய மதிப்பீட்டுக்கும் பரீட்சித்தலுக்குமான சேவைகள், பரீட்சைத் திணைக்களம், த.பெ.இல.1503,கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

ஆரம்பக்கல்வி, விஞ்ஞானம், கணிதம், உடற்கல்வி, மனைப் பொருளியல், ஆங்கிலம், பௌத்தம், இந்துசமயம், இஸ்லாம், கத்தோலிக்கம், கிறிஸ்தவம், முதன் மொழி, சமூகக்கல்வி, விவசாயம், தொழிநுட்பக் கல்வி, நூலகக்கல்வியும் தொடர்பாடல் தொழிநுட்பமும், சித்திரம், நடனம், சங்கீதம், மேலைத்தேய சங்கீதம், விசேட கல்வி நாடகமும் அரங்கியலும் ஆகிய பாடநெறிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேலதிக விபரங்களை வலம்புரிக் காரியாலயத்தில் பார்வையிடலாம்.

(உ)

# மன்னார் மக்களின் வீடுகளை
# படையினர் ஆக்கிரமிப்பு

(கிளிநொச்சி)

மன்னார் மாவட்டத்தில் 154ற்கும் அதிகமான பொதுமக்களின் வீடுகளில் அரசபடையினர் நிலைகொண்டுள்ளதனால் மக்கள் பல சிரமங்களை எதிர்கொண்டுள்ளதாக அப்பகுதி பொதுஅமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

மன்னாரில் ஸ்ரீலங்கா காவல் துறையினர் 15 பொதுக் கட்டடங்களிலும், ஸ்ரீலங்கா தரைப்படையினர் 17 பொதுக் கட்டடங்களிலும் நிலைகொண்டுள்ளனர்.

அத்துடன், 5பாடசாலைகளிலும் 8 பொது இடங்களிலும் 4 கோயில்களிலும் 6 தென்னங்காணிகளிலும் 2 தனியாருக்குச் சொந்தமான காணிகளிலும் 2 பனங்காணிகளிலும் அரசபடையினர் தொடர்ந்தும் நிலை கொண்டுள்ளதாக இவ்வமைப்புக்கள் திரட்டிய புள்ளிவிபரம் மூலம் தெரியவந்துள்ளது.

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு 16 மாதங்கள் கடந்துள்ள நிலையிலும் படையினர் இவ்வாறு அரச மற்றும் தனியாருக்குச் சொந்தமான கட்டடங்களிலும், காணிகளிலும் நிலைகொண்டிருப்பது இம்மக்கள் மத்தியில் பலத்த அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. (உ-8)

# வெளிநாட்டவர்களால் நிரம்பி வழியும்
# தென்னிலங்கைச் சிறைச்சாலைகள்

(கொழும்பு)

தென்பகுதியிலுள்ள சிறைச்சாலைகளில் அண்மைக்காலமாக இடநெருக்கடி நிலவுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதமான முறையில் வெளிநாடு செல்வதற்கென இலங்கையில் தங்கியிருந்தபோது கைது செய்யப்பட்ட இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த 500இற்கும் மேற்பட்டவர்கள் சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

இதன் காரணமாகவே தென் பகுதியிலுள்ள சிறைச்சாலைகளில் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளதாகச் சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, கடந்தவாரம் கண்டி உட்படத் தென்பகுதியில் பல இடங்களிலும் தேடுதல் நடத்திய பொலிஸார் 500ற்கும் மேற்பட்ட உள்நாட்டவர்களைக் கைதுசெய்து காலி, கூசா சிறைசசாலைகள் உட்பட பல சிறைச்சாலைகளில் தடுத்து வைத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இவர்களில் பலர் இராணுவத்தில் இருந்து தப்பியோடியவர்கள். மற்றும் பாதாள உலகக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

# மின் விநியோகத்தில்
# புங்குடுதீவு புறக்கணிப்பு

(வேலணை)

பகுதியாகவே இருந்து வருகி

# மிதிவெடி அச்சுறுத்தல் பற்றி
# பொது மக்கள் புகார்

(சுதுமலை)

வலி.தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட நான்கு பகுதிகளில் மிதிவெடி அச்சுறுத்தல் இருப்பதாக பொது மக்கள் தம்மிடம் முறைப்பாடு செய்

பிட்டி இந்துமயானத்திற்கு அருகில் மிதிவெடிகள் புதைக்கப்பட்டிருக்கும் அறிகுறிகள் இருப்பதாகவும், மாதகல் உப அலுவலகப் பிரிவில் உள்ள பழைய உப அலுவலகச் சுற்றாடல்

கறை காட்டுகிறதா? அல்லது யப்பானின் உற்பத்திப் பொருட்களுக்கு இலங்கை நல்லதொரு சந்தை என்பதால் அங்கு யுத்தம் நடைபெறுவது யப்பானுக்கும் நட்டத்தைத் தரும் என்ற நோக்கிலா என்பதை காலத்தின் அசைவுகளே தீர்மானிக்வேண்டும்.

எதுவாயினும் யப்பான் பிரதி வெளிவிவகார அமைச்சரின் யாழ்ப்பாண விஜயம் தடைப்பட்டுள்ள சமாதான முயற்சியை மீண்டும் முன்னெடுத்துச் செல்வதற்கு உதவும் என நம்பலாம்.

ஆனால் அவரின் யாழ்ப்பாண விஜயம் இடம் பெயர்ந்து அகதிமுகாம்களில் வாழுகின்ற மக்களை அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்துவதற்கு உதவுவதாக இருக்க வேண்டும்.

பொதுவாக வெளிநாட்டுப் பிரதிநிதிகள் பலர் யாழ்ப்பாணத்திற்கு வந்து போகிறார்கள். அவர்களுக்கு மாலை மரியாதைகள் நடக்கின்றன. போதாக்குறைக்கு மனித நேய அமைப்புப் பிரதிநிதிகளின கைலாகும், மகஜர் கையளிப்பும் தாராளமாக நடைபெறுகின்றது. ஆயினும் அவர்களின் வருகையால் தமிழ் மக்கள் எந்த விமோசனமும் பெற்றதாக இல்லை.ஏதோ இருபத்தொராம் நூற்றாண்டில் இலங்கை என்ற நாட்டில் யாழ்ப்பாணம் என்ற பகுதியில் ஒன்றுமே தெரியாத மக்கள் வாழ்வது போலவும் அந்த வாழ்க்கையின் வேடிக்கையை சர்வதேச நாடுகள் பார்வையிட்டுச் செல்வது போலவும், வெளிநாட்டுப் பிரதிநிதிகளின் வருகை அமைந்துள்ளது. இதனால் இப்போது தமிழ் மக்களைப் பொறுத்தவரை வெளி நாட்டுப் பிரதிநிதிகள் வெறுப்புக்குரியவர்களாகவும், ஏமாற்றுக்காரர்களாகவும் ஏன்? உளவாளிகளாகவுமே கருதப்படுகின்றனர்.இந்த வரிசையில் யப்பானும் தன்னைச் சேர்த்துக் கொள்ளாமல் இருந்தால் அதுவே போதுமானதாகும்.

தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த 500இற்கும் மேற் களிலும் தேடுதல் நடத்திய பொலிஸார் 500ற்கும் மேற்பட்ட உள்நாட்

# மின் விநியோகத்தில் புங்குடுதீவு புறக்கணிப்பு

(வேலணை)

மீளக்குடியமர்ந்த புங்குடுதீவு மக்களுக்கான மின்விநியோகம் இதுவரை வழங்கப்படவில்லை.

தீவகத்தின் பல பகுதிகளிற்கும் மின்சாரம் வழங்கப்பட்டபோதும், புங்குடுதீவுப்பகுதி இலங்கை மின்சாரசபையினால் புறக்கணிக்கப்பட்ட பகுதியாகவே இருந்து வருகின்றது.

இப்பகுதிக்கு மின்விநியோகம் செய்யும்படி பலதடவைகள் சம்பந்தப்பட்டோரிடம் வேணடுகோள் விடுக்கப்பட்டபோதும், ஒருபலனும் ஏற்படவில்லையென சம்பந்தப்பட்ட மக்கள் குறைபட்டுக் கொள்கின்றனர். (உ-47)

# ரூபவாஹினி கூ.தா.மீது மங்கள எம்.பி. பாய்ச்சல்

(கொழும்பு)

இலங்கையின் ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் முற்றுமுழுதாக அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளதாக பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர குற்றம் சாட்டியுள்ளார்.

ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் நாட்டின் தலைவியான ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை ஒரு நிகழ்ச்சியில் கடுமையாக விமர்சித்துக் கேலிசெய்துள்ளதாகவும அதற்கு எதிராகச் சட்டநடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவரை வர்ணனை செய்து நிகழ்ச்சிகளை வெளியிடும் ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம், ஜனாதிபதியைக் கடுமையாக விமர்சனம் செய்தது அநீதியானது எனவும் மங்கள சமரவீர விசனம் தெரிவித்துள்ளார். (உ-8)

## தினசரி தியானம்

### ஒத்துழையாமை

ஆன்மீக விடுதலை பெறுவதற்கு நமது நாட்டின் முனிவர்கள் கற்பித்த மிகப் புராதனமான ஆயுதம் ஒத்துழையாமை. இந்த ஒத்துழையாமைபற்றி உங்களுக்குத் தெரியுமா? எல்லாவிதமான தீயசெயல்களையும் செய்யும்படிதூண்டிவிடும் தாழ்ந்த தூய்மையில்லாத மனத்துடன் ஒத்துழைக்காமல் இருப்பது தான் ஒத்துழையாமை. மிக மேலான பரமபதத்தை அடைய விரும்பினீர்களானால், இந்தச் சீர்கெட்ட மனதுடன் ஒத்துழைக்காதீர்கள். காந்தியடிகள் அரசியலில் ஒத்துழையாமை இயக்கத்தை நடத்தி வந்த அதேசமயம், மனத்துடனும் ஒத்துழையாமையை மேற்கொண்டார் அதனால்தான் அவரால் அரசியல் ஞானியாக விளங்க முடிந்தது.

சுவாமி சிவானந்தர்

# மிதிவெடி அச்சுறுத்தல் பற்றி பொது மக்கள் புகார்

(சுதுமலை)

வலி.தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட நான்கு பகுதிகளில் மிதிவெடி அச்சுறுத்தல் இருப்பதாக பொது மக்கள் தம்மிடம் முறைப்பாடு செய்துள்ளனர் என்று பிரதேசசபையின் உள்ளூராடசி உதவியாளர் செ.ரமேஷ் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக மிதிவெடிகளை அகற்றுவதற்கு ஹலோட் ரெஸ்ட் அமைப்பிற்கு அவசர கடிதம்ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

காக்கைதீவு கொள்கலத்திற்கு அருகில் உள்ள பழைய துறை முகப்பகுதியில் இரண்டு பாரிய ஆட்லறி ஷெல்கள் காணப்படுவதாகவும், காக்கைதீவு எருக்கலம்பிட்டி இந்துமயானத்திற்கு அருகில் மிதிவெடிகள் புதைக்கப்பட்டிருக்கும் அறிகுறிகள் இருப்பதாகவும், மாதகல் உப அலுவலகப் பிரிவில் உள்ள பழைய உப அலுவலகச் சுற்றாடல் பகுதியிலும் அத்துடன் இளவாலைப் பகுதியில் உள்ள சேதமடைந்த சனசமூக நிலையச் சுற்றாடலிலும் மிதிவெடி அச்சுறுத்தல் இருப்பதாகவும் தெரியவருகின்றது.

இப்பகுதிகளில் அதிகளவு மக்கள் தற்போது மீளக்குடியேறி உள்ளதால் விரைவில் அந்தப்பகுதிகளில மிதிவெடிகளை அகற்றுவதற்கு ஆவன செய்யுமாறு அக்கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளது.

(பி-252)

# மாகாணசபை அதிகாரங்களை மாற்றியமைக்க நடவடிக்கை

(கொழும்பு)

மாகாண சபைகளுக்கு உள்ள அதிகாரங்களை மாற்றியமைப்பது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாக மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சர் அலுக்அலுவிகார தெரிவித்துள்ளார்.

காலி மாவட்ட உளளூராட்சி மன்ற உறுப்பினர் களுடனான சந்திப்பிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து பேசியஅவர், இதற்கமைய எதிர்காலத்தில மாகாண சபைகளுக்கு உள்ள அதிகாரங்கள் பிரதேச சபைகளுக்கு வழங்கப்படவுள்ளன.

இதேபோன்று மாகாணசபைகள், உள்ளூராட்சி சபை அமைச்சினால் மாகாண சபைகளுக்கென ஒதுக்கப்படும் நிதியும் நேரடியாக பிரதேச சபைகளுக்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(தி)

# மகசின் சிறைக்குள் போதைப் பொருள் கடத்த முயற்சி சிறைச்சாலை அதிகாரி கைது

(கொழும்பு)

கையடக்கத் தொலைபேசி ஒன்றினையும் போதைப்பொருட்கள் நிரப்பப்பட்ட நான்கு சிகரெட் பெட்டிகளையும் மகசின் சிறைச்சாலைக்குள் கொண்டுசென்ற சிறைச்சாலை உத்தியோகத்தர் சிறைச்சாலை அதிகாரியால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் விசாரணைகளுக்காகப் பொரளை பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

மேற்படி உத்தியோகத்தரை உடற்பரிசோதனைக்கு உட்படுத்திய போதே மேற்படி பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இச் சம்பவம்பற்றி விசாரணைகளை மேற்கொள்ளுமாறு சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் சிறைச்சாலை அதிகாரிகளைப் பணித்துள்ளார்.

(பி-3)

# யாழ்ப்பாணத்தில் கண்ணி வெடிகளை அகற்ற குறைந்தது நான்கு வருடங்கள் தேவை

## குடாநாட்டுத் தளபதி தெரிவிப்பு

தற்போதைய சூழ்நிலையில் யாழ் குடா நாட்டில் புதைக்கப் பட்டுள்ள கண்ணிவெடிகளை முழுமையாக அகற்றுவதற்கு ஆகக்குறைந்தது மேலும் நான்கு வருடங்கள் செல்லுமென யாழ் குடாநாட்டு கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் பராமிகுலதுங்க யப்பானிய பிரதிவெளிவிவகார அமைச்சர் ரெற்சுரோ ஜானுவிடம் தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை யாழ்ப் பாணத்திற்கு விஜயம் செய்திருந்த யப்பானிய பிரதிவெளிவிவகார அமைச்சர் பலாலி இராணுவத் தலைமையகத்தின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் பராமிகுலதுங் காவை சந்தித்து கண்ணிவெடிகள் அகற்றுவது குறித்து ஆராய்ந்தார். இச்சந்திப்பின்போது குடாநாட்டு இராணுவக் கட்டளை அதிகாரி மேலும் தெரிவிக்கையில்

இலங்கை இராணுவத்தினர் தம்மிடம் உள்ள வளங்களைக் கொண்டு யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் அதிக அளவிலான கண்ணிவெடிகளை அகற்றி உள்ளனர். இந்நிலையில் கண்ணி வெடிகளை அகற்றுவதற்கு நவீன உபகரணங்கள் தேவைப்படுகிறது என்றும் கூறினார். (வ)

### மண்டைதீவு வாசி சென்னையில் மரணம்

சென்னையில் தங்கியிருந்த மண்டைதீவைச் சேர்ந்த குடும்பஸ் தர் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை அங்கு மரணமானார்.

மண்டைதீவு 6ஆம் வட்டாரத் தைச் சேர்ந்த எஸ்.சுந்தரமூர்த்தி (வயது - 54) என்பவரே மரணமான வராவார்.

தனது வீட்டைத் துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்டிருந்தவேளை தவறு தலாக கீழேவீழ்ந்ததில் இம் மரணம் நிகழ்ந்ததாகத் தெரியவருகிறது.(ந)

### ஆசிரியர்களுக்கான கணனி செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

கணனி மூலம் பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பயிற்சிச் செயலமர்வு யாழ் மத்திய கல்லூரியில் இன்றிலிருந்து எதிர் வரும் 25 ம் திகதி வரை நடைபெ றவுள்ளது.

இப்பயிற்சி வகுப்புக்கள் இன்று காலை 9 மணிக்கு யாழ் வலய கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரனால் ஆரமபித்து வைக்கப்படவுள்ளது. (ந-5)

## சமாதானப் பேச்சுக்களை...

சமாதானப் பேச்சுக்களை தொடர் வது அவசியமாகும்.

தமிழ் மக்களின் வளமான வாழவு கருதி விடுதலைப்புலிகள் மீண்டும் பேச்சுவார்த்தை மேசைக்குச் செல்ல வேண்டும் என்பதையே யப்பான் மக்கள் சார்பில் நான் அவர்களுக்கு வலி யுறுத்திக் கூற விரும்புகின்றேன்.

டோக்கியோ மாநாடு நடைபெற்று மூன்று மாதங்களாகியும் பேச்சுக் கள் தொடராததையிட்டு யப்பான் கவலை கொண்டுள்ளது.

யப்பானியர்கள் இலங்கையுடன் நீண்ட கால நட்புறவைக் கொண்ட வர்கள் என்ற வகையில் இங்கு நிரந்தர அமைதி ஏற்பட வேண்டும் என்பதில் மிகுந்த கரிசனைகாட்டி வருகிறோம்.

தமிழர்களின் கேந்திர கலாசார சின்னமாக விளங்கும் யாழ்ப்பாணம் யுத்த அனர்த்தங்களால் இன்று சின்னா பின்னப்பட்டு இருப்பதை பார்க்கும் போது மனம் வேதனை அடைகிறது.

20 வருடப் போரினால் யாழ்ப் பாண மக்கள் பட்ட இன்னல்களை இன்று நேரில் கண்டறிய எனக் கொரு சந்தர்ப்பம் கிட்டியுள்ளது.

யுத்த அனர்த்தங்களினால் துன் பப்பட்ட தமிழ் மக்களின் துயர் துடைக்க அவர்கள் வாழ்கின்ற பிர தேசங்களை புனர்நிர்மாணம் செய்ய நாம் பக்க துணையாக நிற்போம்.

டோக்கியோ மாநாட்டில் நாம் உறுதி அளித்தவாறு நாலு ஆண்டு களுக்கு தலா ஒரு மில்லியன் அமெரிக்க டொலரை உதவியாக வழங்குவோம்.

தமிழர்கள் தங்கள் கலை கலாசா ரத்தை பேணி வளமாக வாழ நிதி உதவி அளிப்பது எமது கடமை. விடுதலைப் புலிகளுடன் அரசு மீண் டும் பேச்சை ஆரம்பிப்பதன் மூலம் மேலும் பல சர்வதேச நாடுகளின் உதவி கிடைக்க வழிஏற்படும். இலங்கையில் சமாதானம் மலர வேறுவழிகளிலும் உதவுவதற்கு யப்பான் தயாராகவுள்ளது.

இந்த வகையில் வடக்குக் கிழக்கு வாழ் தமிழர்களுக்கு அடிப்படை வசதிகளை யுனிசெவ் நிறுவனத் துடன் இணைந்து ஏற்படுத்த 2.6 மில்லியன் அமெரிக்க டொலர் ஒதுக் கீடு செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிட்ட அவர் இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு ஏற்பட இரு இனங் களும் விட்டுக் கொடுப்புடன் செயற் படுவதுடன் இடைக்கால நிர்வாக சபை விடயத்திலும் இரு சாராரும் விட்டுக் கொடுப்புடன் நடந்து கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்திக் கூறினார்.

(வ-உ-4,16,51)

## மீளக்குடியமர்...

அமைச்சர் மேற்கண்டவாறு தெரி வித்துள்ளார்.

நேற்று யாழ்ப்பாணம் விஜயம் செய்திருந்த அவர் இணுவில் பகு தியில் அமைந்துள்ள இடம் பெயர் ந்தோர் முகாமிற்குச் சென்று இடம பெயர்ந்த மக்களுடன் கலந்துரை யாடி அவர்களின் குறைகளைக் கேட்டறிந்தார்.

இதனைத் தொடர்ந்து இடம் பெயர்ந்து பல்வேறு பகுதிகளிலும் வாழுகின்ற அகதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினார். அகதி களுக்கான ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஊடாக இந்நிதி உதவி வழங்கப்படும்.

நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்பட்ட பின் அகதிகள் அனை வருக்கும் அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படும்.எனினும் முதற் கட்டமாக தற்காலிக வசிப் பிடங்களை ஏற்படுத்திக் கொடுப்ப தற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படு கின்றது என்றும் அவர் தெரிவித் துள்ளார்.

(ம)

## இந்தவருட...

கள் வெளியேற்றப்படுவர் என்பதை எழுத்து மூலம் உறுதி செய்யும் படி ஜே.வி.பியினர் வலியுறுத்தினர் ஆனால் அத்தகையதொரு முடிவுக்கு ஜனாதிபதி தயாராகவில்லை. நோர் வேயின் பணிகளை மீளாய்வு செய் வதற்கு மட்டும் விருப்பம் தெரிவித் திருந்தார்.

ஜே.வி.பியின் அந்தக் கோரிக் கையை ஏற்பதற்கு ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமரும் மறுப்புத் தெரிவித்தி ருந்தார். இராஜதந்திர சமூகத்தின ரின் உணர்வுகளை பாதிக்கக்கூடிய அத்தகைய நடவடிக்கைகள் தொடர் பில் எழுத்து மூல உறுதிமொழி எதுவும் வழங்கப்படுவதை அவர் விரும்பவில்லை.பொ.ஐ.மு.தலை மையில் அரசாங்கம் ஒன்று அமை யும் ஆயின் அதற்குப் பாதகமாக அத்தகைய செயல் அமைந்து விடும் என்றும் கதிர்காமர் சுட்டிக் காட்டினார்.

இதேவேளை கூட்டணி அமைக் கும் சாத்தியக் கூறுகளை மேலும் ஆராயும் நோக்கில் ஜனாதிபதியு டன் மேலும் ஒரு சுற்றுப் பேச்சுக் களை நடத்தவேண்டும் என்று ஜே.வி.பி கோரியுள்ளது.இதன்படி எதிர்வரும் 6-ம் திகதி ஜனாதிபதி மாளிகையில் ஜே.வி.பியினருக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் கூட் டணி அமைப்பது தொடர்பான பேச்சு வார்த்தை ஒன்று இடம் பெறவுள்ளது.

(த)

## புலிகள்...

கத்திடம் சமர்ப்பிக்கவிருக்கும் மாற் றுப் பிரேரணைகள் அடுத்த வாரம் கிளிநொச்சி வரவிருக்கும் நோர்வேத் தூதுவர் ஹன்ஸ் பிரட்ஸ்கார் மூலம் அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்கப் படவிருக்கின்றது. புலிகளின் மாற் றுப் பிரேரணைகளில், தமது கட் டுப்பாட்டுப் பகுதிகளில் பொலிஸ், பாதுகாப்பு, காணி, வருவாய் ஆகி யவற்றுக்கான அதிகாரங்கள் சேர்க் கப்பட வேண்டும் என்று கோரப் பட்டுள்ளதாக கிளிநொச்சி வட்டா ரங்கள் தெரிவிக்கின்றன.

மேற்படி திருத்தங்களை ஏற்றுக் கொள்வதன் மூலம் புலிகளின் கட் டுப்பாட்டுப் பகுதிகளை அரசாங் கம் அங்கீகரிப்பதாக இருக்கும். அத்துடன் எல்லைகளையும் நியா யாதிக்கப்பகுதிகளையும் தீர்மானித் தல் வேண்டும். இதேவேளை புலி களின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம லண்டனில் இருந்து கொண்டு பங்குபற்றுவதற்கு வசதியாவே ஏழாவது சுற்றுப் பேச்சுவார்த்தைக்கு பாரிஸ் நகரம் தெரிவு செய்யப்பட்டிருப்பதாகவும் அறியப்படுகின்றது. (த)

## மூதூரில்...

புலானாய்வுப் பணியில் இருந்து இடை நிறுத்தப்பட்டிருந்ததாகத் தெரி விக்கப்படுகிறது.

மேற்படி கொலை சம்பவம் தொடர்பாக பொலிசார் விசாரணை களை மேற் கொண்டு வருகின்ற னர். (த)

உங்கள் வலம்புரியின் வாரமலர்

அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்கப் படவிருக்கின்றது. புலிகளின் மாற்றுப் பிரேரணைகளில், தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் பொலிஸ், பாதுகாப்பு, காணி, வருவாய் ஆகியவற்றுக்கான அதிகாரங்கள் சேர்க்கப்பட வேண்டும் என்று கோரப்பட்டுள்ளதாக கிளிநொச்சி வட்டா

தல் வேண்டும். இதேவேளை புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம லண்டனில் இருந்து கொண்டு பங்குபற்றுவதற்கு வசதியாவே ஏழாவது சுற்றுப் பேச்சுவார்த்தைக்கு பாரிஸ் நகரம் தெரிவு செய்யப்பட்டிருப்பதாகவும் அறியப்படுகின்றது. (த)

கல்லூரியில் இன்றிலிருந்து எதிர் வரும் 25 ம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி வகுப்புக்கள் இன்று காலை 9 மணிக்கு யாழ் வலய கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரனால் ஆரமபித்து வைக்கப்படவுள்ளது. (ந-5)

ருந்தார். இராஜதந்திர சமூகத்தினரின் உணர்வுகளை பாதிக்கக்கூடிய அத்தகைய நடவடிக்கைகள் தொடர்பில் எழுத்து மூல உறுதிமொழி எதுவும் வழங்கப்படுவதை அவர் விரும்பவில்லை. பொ.ஐ.மு.தலைமையில் அரசாங்கம் ஒன்று அமையும் ஆயின் அதற்குப் பாதகமாக அத்தகைய செயல் அமைந்து

## மூதூரில்...

புலானாய்வுப் பணியில் இருந்து இடை நிறுத்தப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி கொலை சம்பவம் தொடர்பாக பொலிசார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (த)


# உங்கள் வலம்புரியின் வாரமலர்




விலை ரூபா 14.00

# சங்குநாதம்

- ★சீரழிந்து போகின்ற யாழ்ப்பாணக் கலாசாரம்.
- ★இடைக்கால சபைக்கு எதிராக ஜே.வி.பி ஆர்ப்பாட்டம்.
- ★சங்குநாதத்தின் ஆலடி மாநாடு மதக்கலவரத்தைத் தூண்டுகிறது.
  யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கம் குற்றச்சாட்டு
- ★பன்னாட்டுப்படைகள் இலங்கைக்கு வருமா?
- ★தமிழ்ச்செல்வனின் கிழக்கு விஜயம், தென்னிலங்கை அரசியலில் சர்ச்சை
- ★வியாசரின் பதில்கள்.
- ★செங்கை ஆழியானின் ஈழராஜா எல்லாளன் (தொடர் நவீனம்)
- ★பொன்.கணேசமூர்த்தியின் கடிவாளம் இல்லாத கனவு (நெடுங்கதை)

**இன்னும் பற்பல...**

வாசிக்கத் தவறாதீர்கள் திங்கள் வைகறையில் உங்கள் உள்ளங்களில் ஒலிப்பது

# சங்குநாதம்



இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.08.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.